G. C. E. A/L

# பொருளியல்

- கேள்வி
- நிரம்பல்
- சமநிலை
- நெகிழ்ச்சி

கடந்தகால

பரீட்சை வினாக்கள்

R. இராஜேஸ்வரன்

வெளியீடு:

I. A. S

Point Pedro Road, AVARANKAL.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கேள்வி நிரம்பல்

1) குறிப்பிட்ட சந்தை ஒன்றில் ஒரு பொருளுக்கு நிலவிய கேள்வி நிலைமை வருமாறு.

| விலை | கேள்வித் தொகை |
|---|---|
| 10 | 500 |
| 20 | 100 |

a) கேள்விக் கோட்டினை வரைக
b) கேள்விக் கோட்டின் சரிவு யாது?
c) கேள்விக் கோட்டில் bயின் பெறுமதி யாது?
d) கேள்விக் கோட்டில் aவின் பெறுமதி யாது?
e) கேள்விச் சமன்பாட்டினை அமைக்குக

2) Qd = 2000 — 50 P எனக் கேள்வி சமன்பாடு தரப்படுகின்றது
i) 5/- விலையில் கேள்வித் தொகை யாது?
ii) கேள்வித் தொகை 1000 அலகுகள் ஆயின் சந்தை விலை யாது?
iii) குறிப்பிட்ட பொருளின் விலை 2 ரூபாவால் மாற்றமடையுமாயின் கேள்வித்தொகை எவ்வளவாக மாற்றமடையும்
iv) குறிப்பிட்ட பொருளின் விலை O ஆயின் நுகர்வோரன் கொள்வனவு செய்யத் தயாராக இருக்கும் தொகை எவ்வளவு?
v) எவ்விலையில் கேள்வித்தொகை உச்சமாகும்.

3) குறிப்பிட்ட சந்தை ஒன்றில் ஒரு பொருளுக்கு நிலவிய நிரம்பல் நிலமை பின்வருமாறு.

| விலை | நிரம்பல் |
|---|---|
| 20 | 2000 |
| 40 | 10000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i) நிரம்பல் கோட்டினை வரைக

ii) நிரம்பல் சமன்பாட்டில் dயின் பெறுமதியினை மதிப்பிடுக.

iii) நிரம்பல் சமன்பாட்டில் cயின் பெறுமதியினை மதிப்பிடுக.

4) நேர் கோட்டு வடிவில் அமையும் நிரம்பல் கோட்டுக்குரிய சமன்பாடு ஆனது பின்வருமாறு தரப்படுகிறது.

$QS = 200 + 20P$

i) 20/- விலையில் நிரம்பல் தொகை யாது?

ii) குறிப்பிட்ட பொருளில் 800 அலகை உற்பத்தியாளர் எவ்விலையில் விற்பனை செய்யத் தயாராக உள்ளனர்.

iii) குறிப்பிட்ட பொருளின் விலை 2/– ஆல் மாற்றமடையும் போது நிரம்பல்தொகை என்ன அளவாக மாற்றமடையும்?

iv) எவ்விலையில் நிரம்பல் தொகை 200 அலகுகள் ஆகும்.

v) எவ்விலையில் நிரம்பல்தொகை O ஆகும்.

5) குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒரு பொருளுக்கு நிலவிய 2/- விலையில் 1000 அலகுகளுக்கும் 8/- விலையில் 400 அலகுகளுக்கும் கேள்வி ஏற்பட்டது.

i) கேள்விக் கோட்டினை வரைக.

ii) இக்கேள்விக் கோட்டின் 4/- வில் இருந்து 8/- வாக உயரும் போது கேள்வித் தொகை குறைவடையும் நிலையை படத்தில் குறிப்பிடுக. இதனை எவ்வாறு அழைப்பீர்.

iii) கேள்விக் கோட்டில் 6/- ல் இருந்து 2/- குறையும்போது கேள்வித் தொகையில் ஏற்படும் மாற்றத்தை வரைபடத்தில் காட்டுக

iv) இக் கேள்விக் கோட்டிற்குரிய சமன்பாட்டினைத் தருக.

6) குறிப்பிட்ட சந்தையொன்றின் நிரம்பல் நிலைமை வருமாறு.

| விலை | நி. தொகை |
|---|---|
| 2 | 200 |
| 5 | 800 |
| 7 | 1200 |
| 8 | 1400 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

a) நிரம்பல் கோட்டினை வரைக

b) விலை 3 ரூபாவிலிருந்து 6 ரூபாவாக அதிகரிக்கும்போது நிரம்பல் தொகையில் ஏற்படும் மாற்றத்தைப் படத்தில் காட்டுக. இதனை எவ்வாறு குறிப்பிடுவீர்.

c) விலை 6 ரூபா. 4 ரூபாவாகக் குறையும்போது நிரம்பல் தொகையில் ஏற்படும் மாற்றத்தைப் படத்தில் காட்டுக. இதனை எவ்வாறு குறிப்பிடுவீர்.

d) இந்நிரம்பல் கோட்டிற்குரிய சமன்பாட்டினைத் தருக.

7) ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒரு குறிப்பிட்ட சந்தையில் ஒரு நுகர்வோனால் ஒரு பொருளுக்கு ஏற்படுத்திய கேள்வியினைப் பின்வருமாறு தரப்படுகின்றது.

| விலை | கே / தொகை |
|---|---|
| 3 | 800 |
| 5 | 500 |
| 8 | 50 |

இச்சந்தையில் மேற்தரப்பட்ட கேள்விச் சார்பினைக் கொண்ட ஒரேமாதிரியான 10 நுகர்வோர் உள்ளனர்.

a) சந்தைக் கேள்வி அட்டவணையைத் தயாரிக்குக.

b) சந்தைக் கேள்விக்கோட்டினை வரைக.

c) 6/- ல் சந்தைக்கேள்வி யாது.

d) கேள்வி 6500 அலகாக உள்ளபோது விலை யாது.

e) ஏற்கனவே உள்ள நுகர்வோரைப் போல மேலும் 10 பேர் சந்தையில் பிரவேசித்தால் புதிய சந்தைக்கேள்வி அட்டவணையைத் தயார்செய்க.

f) புதிய சந்தைக் கேள்விக்கோட்டினை வரைக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) குறிப்பிட்ட சந்தை ஒன்றில் ஒரு பொருளுக்கு நிலவிய கேள்வி நிரம்பல் நிலைமை வருமாறு.

| விலை | கேள்வி | நிரம்பல் |
|---|---|---|
| 05 | 200 | 100 |
| 10 | 100 | 200 |

i) மேற்படி தரவினடிப்படையில் கேள்வி நிரம்பல் சமன்பாடுகளை அமைக்குக.

ii) கேள்வி, நிரம்பல் சமன்பாட்டில் a, b, c, d யின் பெறுமதியைக் குறிப்பிடுக.

iii) கேள்வி, நிரம்பல் சமன்பாடுகளின் அடிப்படையில் சமநிலை, தொகை, விலையினை மதிப்பிடுக.

iv) கேள்வி, நிரம்பல் கோடுகளை வரைக. சமநிலையை ஒப்புநோக்குக

v) எவ்விலையில் கேள்வித்தொகை பூச்சியமாகும்,

vi) விலை 0 ஆயின் கேள்வித் தொகை யாது.

## வரைபட வினாக்கள்

1) ஒரு பொருளுக்கான கேள்வி, நிரம்பல் தரவுகள் வருமாறு,

| விலை ரூபா | கே / தொகை (அலகுகள்) | நி / தொகை (அலகுகள்) |
|---|---|---|
| 2 | 10000 | 2000 |
| 10 | 2000 | 10000 |

i) கேள்வி, நிரம்பல் கோடுகளை வரைக.

ii) சந்தை சமநிலை, விலை, தொகையினை மதிப்பிடுக

iii) 3 ரூபா விலையில் கேள்வி, நிரம்பல் யாது? மிகை கணியம் என்னவாகும்?

iv) 7 ரூபா விலையில் கேள்வி, நிரம்பல் யாது? மிகைகணியம் என்னவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) குறிப்பிட்ட பொருள் ஒன்றின் விலை 4/- ஆயின் மிகை கேள்வியோ, மிகை நிரம்பலோ காணப்படவில்லை. இவ்விலை 1/- வினால் கூடினால் அல்லது குறைந்தால் கேள்வி 30 அலகுகளினால் குறையும் அல்லது கூடும். நிரம்பல் 20 அலகுகளால் கூடும் அல்லது குறையும். 6/- இல் எத்தகைய அலகும் கோரப்படவில்லை.

i) நேர்கோட்டுத் தன்மைவாய்ந்த கேள்வி, நிரம்பல் கோட்டினை வரைக.

ii) 2/- விலையின் கேள்வி, நிரம்பல் மிகை கேள்வியை மதிப்பிடுக. இதனால் சந்தை விலை என்ன அளவாக உயரும்.

iii) 5/- விலையில் கேள்வி நிரம்பல், மிகைநிரம்பலை மதிப்பிடுக. இதனால் சந்தை விலை என்ன அளவாக குறையலாம்.

3) சந்தையில் குறிப்பிட்ட பண்டம் தொடர்பாக கேள்வி வழங்கல் வளையிகளின் இரண்டு புள்ளிகளாகும்.

| விலை | கே / தொகை | நி / தொகை |
|---|---|---|
| 01 | 2000 | 200 |
| 20 | 50 | 3000 |

i) நேர்கோட்டுத் தன்மைவாய்ந்த கேள்வி, நிரம்பல் கோடுகளை வரைக.

ii) சமநிலை விலை, தொகையினை மதிப்பிடுக.

iii) சமநிலையில் கேள்வி, நெகிழ்ச்சி யாது?

iv) சமநிலையில் நிரம்பல் நெகிழ்ச்சி யாது?

v) கேள்வி நெகிழ்ச்சி எவ்விலையில் ஒன்றுக்கு சமனாகும்?

vi) தொகை 500 அலகாக உள்ளபோது கேள்வி விலை என்ன?

vii) தொகை 1800 அலகாக இருக்கும்போது வழங்கல் விலை என்ன?

viii) சமநிலை விலையில் நுகர்வோன் மிகையை ரூபாவில் அளவிடுக.

ix) சமநிலை விலையில் உற்பத்தியாளன் மிகையை ரூபாவில் அளவிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

x) அறவிடக்கூடிய ஆகக்கூடிய விலை 7/- என அரசு விதிக்கும் பட்சத்தில் அவ்விலையில் சந்தையில் நிலவக்கூடிய மேலதிக கேள்வி யாது?

xi) 5—10 ரூபாவாக மாறும்போது வில் நெகிழ்ச்சி யாது?

4) சந்தை ஒன்றில் குறிப்பிட்ட பொருள் ஒன்றின் கேள்விச் சார்பு $P = 80 - \frac{Qd}{50}$ எனத் தரப்படுகின்றது.

— இப்பொருளுக்கான நிரம்பல் பட்டியல் வருமாறு:

| விலை | நி / தொகை |
|---|---|
| 20 | 1000 |
| 40 | 2000 |
| 60 | 3000 |

i) கேள்வி, நிரம்பல் கோடுகளை வரைக.

ii) சந்தை சமநிலையை மதிப்பிடுக.

iii) நிரம்பல் மாறாத நிலையில் எவ்விலையிலும் கேள்வி 1000 அலகுகள் அதிகரிக்குமாயின் புதிய கேள்விக் கோட்டினை வரைக.

iv) புதிய சமநிலையை மதிப்பிடுக.

v) இப்பண்டம் 0·5 டொலர் என்ற அடிப்படையில் இறக்குமதி செய்யப்படலாம். எனின் (டொலர் =40/-) உள்நாட்டு நிரம்பல், இறக்குமதி நிரம்பல், கேள்வி சந்தையின் நிரம்பல் கோடு ஆகியவற்றைத் தருக.

5) $QD = 200 - 10P$

$QS = -30 + 15P$

என்றவாறு கேள்வி, நிரம்பல் சமன்பாடுகள் தரப்படுகின்றன.

i) பொருத்தமான கேள்வி, நிரம்பல் பட்டியலை அமைத்து கேள்வி நிரம்பல் கோடுகளை வரைக.

ii) சந்தை சமநிலையை மதிப்பிட்டு விலை நெகிழ்ச்சியை மதிப்பிடுக.

iii) அரசு குறைந்தபட்ச கட்டுப்பாட்டு விலையாக 10/- இனை விதிப்பின் ஏற்படக்கூடிய மிகை நிரம்பலை மதிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv) இச்சந்தர்ப்பத்தில் யாது நிகழும்? வழங்குநரின் சாத்திய மான நடத்தை யாது?

v) குறைந்தபட்ச விலையை செயற்திறன் உடையதாக்க அரசினால் மேற்கொள்ளக்கூடிய மாற்று வழிகளைக் குறிப்பிடுக. இதனைக் கணிதரீதியாக மதிப்பிட்டு எதனை அரசு விரும்பும்.

vi) சமன்பாடுகளின் அடிப்படையில் சமநிலையை மதிப்பிடுக.

6) சந்தை ஒன்றில் பொருள் ஒன்றின் விலையானது 50/- ஆயின் மிகை கேள்வியோ மிகை நிரம்பலோ காணப்படமாட்டாது. விலை 10/- இனால் கூடினால் அல்லது குறைந்தால் கேள்வித் தொகை 250 அலகுகளினால் குறையும் அல்லது கூடும். நிரம்பல் 200 அலகுகளினால் கூடும் அல்லது குறையும். 70/- ஆயின் நிரம்பல் தொகை 900 அலகுகள் ஆகும்.

i) நேர்கோட்டுத் தன்மையான கேள்வி நிரம்பல் கோடுகளை வரைக.

ii) சமநிலையை மதிப்பிடுக.

iii) 30/- வினை உயர்ந்தபட்சக் கட்டுப்பாட்டு விலையாக விதிப்பின் ஏற்படக்கூடிய மிகைக் கேள்வியை மதிப்பிடுக.

iv) மிகைக் கேள்வியின் போக்கினால் ஏற்படக்கூடிய கறுப்பு சந்தை விலை யாது?

v) கட்டுப்பாட்டு விலையை செயற்திறனாக்க வேண்டுமாயின் எவ்வளவு பொருளை இறக்குமதி செய்யவேண்டும்?

vi) வேறு மாற்றுவழிகளைக் குறிப்பிட்டு கருத்துரைக்குக.

vii) 45/- விலையில் கேள்வி, நிரம்பல் நெகிழ்ச்சியை மதிப்பிடுக.

viii) மிகைக் கேள்வி மிகைநிரம்பல் அட்டவணையைதயாரிக்குக

ix) மிகைக் கேள்வி, மிகை நிரம்பல் வளையியை இன்னொரு படத்தில் வரைக,

x) ஒவ்வொரு விலையிலும் மிகைக் கேள்வி 50 அலகுகள் அதிகரிப்பின் புதிய சமநிலை விலை யாது? புதிய சமன்நிலை தொகை யாது?

7) சந்தை ஒன்றின் பொருள் ஒன்றின் விலை 1/- ஆகக் காணப்பட்டபோது கேட்கப்பட்ட தொகை 9 அலகாகவும் மிகைக்கேள்வி 9 அலகாகவும் காணப்பட்டது, இவ்விலை 10/- ஆகக் காணப்பட்டபோது கேட்கப்பட்ட தொகை O ஆகவும் மிகை கேள்வி — 18 அலகாகவும் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i) ஒவ்வொரு ரூபா விலை மாற்றத்திலும் கேள்வி நிரம்பல் மிகைக்கேள்வி, மிகைநிரம்பல் அட்டவணையைத் தயாரிக்க.

ii) கேள்வி, நிரம்பல் கோட்டினையும் கேள்வி, நிரம்பல் சமன்பாடுகளையும் தருக.

iii) சமநிலை விலை தொகையினை மதிப்பிடுக. கேள்வி நிரம்பல் நெகிழ்ச்சியையும் மதிப்பிடுக.

iv) மிகை கேள்வி, மிகை நிரம்பல் கோட்டினை இன்னொரு படத்தில் வரைக.

v) ஒவ்வொரு விலையிலும் கேள்வி 2 அலகுகளினால் அதிகரிப்பின் புதிய மிகைக் கேள்விக் கோட்டினை வரைந்து சமநிலை விலையினைக் குறிப்பிடுக.

8) $QD = 700 - 20P$. $QS = -100 + 30P$ என்பது கேள்வி, நிரம்பல் சார்புகளாகும்.

i) பொருத்தமான கேள்வி நிரம்பல் அட்டவணையைத் தயாரிக்குக.

ii) கேள்வி நிரம்பல் கோடுகளை வரைக.

iii) குறைந்தபட்ச கட்டுப்பாட்டு விலையாக 20/= வினை அரசு நிர்ணயிப்பின் ஏற்படக்கூடிய மிகை நிரம்பலின் அளவை மதிப்பிடுக. இவ்விலை செயற்திறன் அற்றதாயின் சந்தை விலை என்ன அளவாகக் குறையும்?

iv) அரசு இந்நிலையைத் தடுப்பதற்கு கொள்வனவு செய்வதனால் ஏற்படக்கூடிய செலவு யாது?

v) மானியம் வழங்குவதனால் ஏற்படக்கூடிய செலவை மதிப்பிடுக.

9)

| விலை | கேள்வி | நிரம்பல் | கே / நெகிழ்ச்சி | நி. நெகிழ்சி |
|---|---|---|---|---|
| 10 | 100 | 500 | 02 | 01 |

i) பொருத்தமான கேள்வி நிரம்பல் அட்டவணையைத் தயாரிக்குக.

ii) கேள்வி, நிரம்பல் கோடுகளை வரைக.

iii) சமநிலை, விலை தொகையை மதிப்பிடுக.

iv) அரசு உற்பத்தியாளர்மீது குறித்த வரியாக 2/- வினை விதிப்பின் புதிய நிரம்பல் கோட்டினை வரைக. சமநிலையை மதிப்பிடுக.

v) விதிக்கப்பட்ட வரியில் நுகர்வோன், உற்பத்தியாளன் செலுத்தும் அலகுக்கான வரி யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vi) விதிக்கப்பட்ட வரியில் நுகர்வோன் உற்பத்தியாளன் செலுத்தும் மொத்தவரி யாது?

vii) அரசுக்கு ஏற்படும் மொத்த வரி வருமானம் யாது?

10) சமநிலை விலை தொகை முறையே 10/- ஆகவும் மாதாந்தம் 500 அலகுகளாகவும் காணப்பட்டது. விலை 2/- வினால் கூடினால் கேள்வி 200 அலகால் மாற நிரம்பல் 150 அலகால் மாறும்.

i) நேர்கோட்டு நிரம்பல் வளையியை வரைக.

ii) உற்பத்தியாளர்மீது வரியை விதித்தபோது நுகர்வோனே 2/- வினை அலகுக்குப் பெற்றால் விதிக்கப்பட்ட அலகுக்கான மொத்தவரி யாது?

iii) உற்பத்தியாளன் பெறும் அலகுக்கான வரி யாது?

iv) அரசுக்கு ஏற்படும் மொத்த வருமானம் யாது?

v) 5/- வில் புள்ளி நெகிழ்ச்சியை மதிப்பிடுக

11) சமநிலை விலை தொகை முறையே 25/- ஆகவும் மாதாந்தம் 600 அலகுகளாகவும் காணப்பட்டது. 5/- மாறினால் கேள்வி 200 அலகால் மாறும் 35/- ல் மிகை நிரம்பல 900 அலகுகளாகும்.

i) கேள்வி, நிரம்பல் வளையிகளின் வகை?

ii) அலகொன்றுக்கு உற்பத்தியாளன்மீது வரியை விதித்த போது 2/- இனை உற்பத்தியாளனே பெற்றால் விதிக்கப்பட்ட அலகுக்கான மொத்தவரி யாது?

iii) வரியின் பின்னரான நிரம்பல் கோட்டினை வரைந்து புதிய சமநிலையை மதிப்பிடுக,

iv) நுகர்வோன், உற்பத்தியாளர்கள் செலுத்தும் வரியின் மொத்தப் பெறுமதியை மதிப்பிடுக.

v) அரசு பெறும் மொத்த வரிவருமானம் யாது?

vi) 5/- வில் புள்ளி நெகிழ்ச்சியை மதிப்பிடுக?

12)

| விலை | கேள்வி | நிரம்பல் | கேள்விக் கோட்டின் சரிவு | நிரம்பல் கோட்டின் சரிவு |
|---|---|---|---|---|
| 10 | 1200 | 200 | 5/500 | 5/5500 |

i) பொருத்தமான கேள்வி, நிரம்பல் கோட்டினை வரைக

ii) அரசு உற்பத்தியாளர்மீது உதவிப்பணமாக 3/- வினை வழங்கின் புதிய சமநிலையை மதிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii) உற்பத்தியாளன் நுகர்வோன் பெறும் அலகுக்கான மானியம் யாது?

iv) அரசுக்கு ஏற்படும் மொத்த மானியச் செலவு யாது?

13) சமநிலை விலை தொகை முறையே 10/-, 5000 அலகுகள் ஆகும். சந்தை விலை 15/- ஆயின் கேள்வி 3500 அலகுகள். இவ்விலையில் மிகை கேள்வி - 4000 அலகுகள் ஆகும்.

i) நேர்கோட்டு கேள்வி நிரம்பல் கோட்டினை வரைக?

ii) அரசு அலகுக்குரிய மானியமாக 5/- இனை வழங்கிய போது 3/- இனை உற்பத்தியாளனே பெற்றால் வழங்கப் பட்ட அலகுக்குரிய மானியச் செலவு யாது?

iii) மானியம் வழங்கிய பின்னரான நிரம்பல் கோட்டினை வரைக?

iv) புதிய சமநிலை யாது?

v) அரசுக்கு ஏற்படும் மொத்த மானியச் செலவு யாது?

# அட்சர கணித முறை

X என்ற பொருளுக்கான

கேள்விச் சமன்பாடு $Qd = 2000 - 100\,p$

நிரம்பல் சமன்பாடு $Qs = -100 + 100\,p$

ஆக தரப்படுகின்றது.

1) a) சமநிலை, விலை தொகை என்பவற்றைக் காண்க.

b) ஒவ்வொரு விலையிலும் கேள்வி 50% இனால் அதிகரிக்குமாயின் புதிய சமநிலை விலை, தொகை யாது?

c) ஆரம்ப கேள்வி, நிலைமை இருக்கையில் 300 அலகுகளால் நிரம்பல் அதிகரிக்குமாயின் புதிய சமநிலை விலை தொகை யாது?

2) a) 8/- விலையில் கேள்வி யாது? நிரம்பல் யாது? மிகைக்கேள்வி யாது?

b) பூச்சிய விலையில் கேள்வி நிரம்பலை மதிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

c) இந் நடவடிக்கை கேள்விச் சமன்பாட்டில், நிரம்பல் சமன் பாட்டில் எம்மாறியை புலப்படுத்துகின்றது.

d) பூச்சியக் கணியத்தில் கேள்வி நிரம்பல் விலை யாது?

3) a) எவ் விலையில் கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்கு சமனாகும்.

b) எவ் விலையில் கேள்வி நெகிழ்ச்சி முடிவிலியாகும்.

c) எவ் விலையில் கேள்வி நெகிழ்ச்சி பூச்சியமாகும்.

d) எவ் விலைக்கு மேல் கேள்வி நெகிழ்ச்சி வாய்ந்த கேள்வி யாகும்.

e) எவ் விலைக்கு கீழ் கேள்வி நெகிழ்ச்சியற்ற கேள்வியாகும்.

4) a) சமநிலை விலையில் நுகர்வோன்மிகை யாது?

b) சமநிலை விலையில் உற்பத்தியாளன் மிகை யாது?

c) 8—10 ரூபாவாக மாறும்போது வில் நெகிழ்ச்சி யாது?

d) 5—10 ரூபாவாக மாறும்போது நுகர்வோன் செலவு அடிப்படையிலான நெகிழ்ச்சி கணிப்பீடு என்னவாகும்.

5) ஆரம்ப கேள்வி நிரம்பல் நிலைமைகள் இருப்பதாக கருதுக. இந் நிலைமையில் அரசு அலகொன்றுக்கு 3/- இனை நேரில் வரியாக விதிக்கும் பட்சத்தில்

a) புதிய சமநிலை விலை, தொகை யாது?

b) X பொருளின் ஒரு அலகினைப் பொறுத்து உற்பத்தி யாளர் தாங்கும் வரியின் அளவு யாது?

c) நுகர்வோரால் செலுத்தப்படும் அலகு வரி யாது?

d) நுகர்வோர் செலுத்தும் மொத்த வரி யாது?

e) உற்பத்தியாளர் செலுத்தும் மொத்த வரி யாது?

f) அரசின் மொத்த வரி வருமானம் யாது?

6) ஆரம்ப கேள்வி நிரம்பல் நிலைமை இருப்பதாக கருதுக. இந் நிலைமையில் அரசு அலகொன்றுக்கு 4/- இனை மானியமாக வழங்கின்

a) புதிய நிரம்பல் சமன்பாட்டினைத் தருக.

b) புதிய சமநிலை விலை தொகை யாது?

c) X பொருளின் ஒரு அலகினை குறித்து நுகர்வோர் பெறும் நன்மை யாது?

d) நுகர்வோர் பெறும் மொத்த மானிய நன்மை யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

e) உற்பத்தியாளன் பெறும் அலகு மானிய நன்மை யாது?

f) உற்பத்தியாளன் பெறும் மொத்த மானிய நன்மை யாது?

g) அரசுக்கு ஏற்படும் மொத்த மானியச் செலவு யாது?

7) ஆரம்ப கேள்வி, நிரம்பல் நிலைமை இருப்பதாக கருதுக. இந் நிலைமையில் அரசாங்கம் உயர்ந்த பட்சக் கட்டுப்பாட்டு விலையாக 7/- வினை விதிப்பதாக கருதுக.

a) கேள்வி, நிரம்பல், மிகை கேள்வி எவ்வளவாகும்?

b) சந்தையில் தோன்றக் கூடிய கறுப்புச் சந்தை விலை யாது?

c) உயர்ந்த பட்ச கறுப்புச் சந்தை விலையில் விற்பனையாளன் பெறும் சட்டரீதியற்ற வருமானம் யாது?

d) சட்டரீதியற்ற விலையைக் கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடத்தை யாது?

8) ஆரம்ப கேள்வி, நிரம்பல் நிலைமைகளை கருதி குறைந்த பட்சக் கட்டுப்பாட்டு விலையாக 12/- வினை நிர்ணயிப்பதாக கருதுக.

a) கேள்வி, நிரம்பல் மிகை கணியம் யாது?

b) கட்டுப்பாட்டு விலை செயற்திறன் அற்றதாயின் சந்தை விலை என்ன அளவாக குறையும்.

c) விலைக்குறைவினை தடுக்க மேற்கொள்ளக் கூடிய மாற்று நடவடிக்கைகளை மதிப்பிடுக.

d) எதனை அரசு விரும்பும்.

e) கேள்வி நெகிழ்ச்சியின் செயற்பாடு பற்றி யாது கூறமுடியும்?

9) ஆரம்ப கேள்வி நிரம்பல் நிலைமை இருப்பதாகவும், சர்வதேச சந்தையில் குறிப்பிட்ட பொருளில் எவ்வளவு அலகையும் 5/- விலையில் பெறக்கூடியதாக இருப்பதாக கொள்க.

a) குறிப்பிட்ட நாடு எவ்வளவு பொருட்களை உள் நாட்டில் உற்பத்தி செய்கின்றது.

b) உள்நாட்டில் கேள்வியின் அளவு யாது?

c) இறக்குமதி அளவு யாது?

d) ஒவ்வொரு விலையிலும் 300 அலகுகளால் கேள்வி அதிகரிப்பின் தற்போது இறக்குமதி செய்ய வேண்டிய அளவு யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

c) கேள்வி ஆரம்பத்தில் தரப்பட்டதைப்போல இருக்கையில் உள்நாட்டு நிரம்பல் 500 அலகுகளினால் எவ் விலையிலும் அதிகரிப்பின் இந் நாடு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவு யாது?

10) ஒரு சந்தையில் XYZ என்ற தனிப்பட்ட விற்பனையாளர்களின் நிரம்பல் சமன்பாடு வருமாறு.

$$QSX = -30 + 5p$$
$$QSY = -20 + 6p$$
$$QSZ = -50 + 8p$$

a) சந்தையின் நிரம்பல் சமன்பாட்டினைத் தருக.

b) 10, 20, 30 ரூபாவில் தனியார் சந்தை நிரம்பல் அட்டவணையைத் தயார்செய்க.

c) தனியார் சந்தை நிரம்பல் கோடுகளை வரைக.

# மாதிரி பரீட்சை வினாக்கள்

1) தேயிலைக்கான கேள்விக் கோட்டினைக் கருதி, எவை கேள்விக்கோட்டின் நகர்வை, எவை கேள்விக் கோட்டின் வழியே நகர்வினை ஏற்படுத்தும் என்பதனைக் குறிப்பிடுக.

i) தேயிலையின் விலை வீழ்ச்சி.
கோடு நகர்வு / கோட்டின் வழியே நகர்வு.

ii) நுகர்வோன் வருமானம் அதிகரிப்பு.
கோடு நகர்வு / கோட்டின் வழியே நகர்வு.

iii) தேயிலையின் விலை அதிகரிப்பு.
கோடு நகர்வு / கோட்டின் வழியே நகர்வு.

iv) சீனியின் விலை அதிகரிப்பு.
கோடு நகர்வு / கோட்டின் வழியே நகர்வு.

v) தேயிலைக்கான நுகர்வோன் முன்னுரிமையில் உயர்ச்சி.
கோடு நகர்வு / கோட்டின் வழியே நகர்வு.

vi) தேயிலையின் விலை குறைவு
கோடு நகர்வு / கோட்டின் வழியே நகர்வு.


vii) சீனியின் விலை குறைவு.
கோடு நகர்வு / கோட்டின் வழியே நகர்வு.

viii) காலநிலை சாதகமாக மாறல்:
கோடு நகர்வு / கோட்டின் வழியே நகர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) பின்வரும் நான்கு கேள்விக் கோடுகளைக் கருதி, பின்வரும் எந்நிலைமைக்கு பொருந்தும் என்பதனைக் குறிப்பிடுக.




i) ஏனையவை மாறாத நிலையில் ஒரு பொருளின் விலை அதிகரித்தபோது நுகர்வோர் ஒரே அளவை கொள்வனவு செய்தனர். (..........)

ii) ஏனையவை மாறாத நிலையில் ஒரு பொருளின் விலை அதிகரிக்க நுகர்வோர் அப்பொருளின் கொள்வனவு செய்வதனை முற்றாகக் கைவிடுகின்றனர். (..........)

iii) ஏனையவை மாறாத நிலையில் ஒரு பொருளின் விலை அதிகரிக்க நுகர்வோர் தாம் கொள்வனவு செய்வதை குறைத்துக் கொள்கின்றனர்.

iv) ஏனையவை மாறாத நிலையில் ஒரு பொருளின் விலை அதிகரிக்க நுகர்வோர் தாம் கொள்வனவு செய்வதனையும் அதிகரிக்கின்றனர்.

3) தேயிலையின் சந்தைக் கேள்வி வளையியை கருதி பின்வரும் காரணிகள் தேயிலைக்கான கேள்வி வளையியில் எத்தகைய தாக்கத்தை உண்டு பண்ணும் என்பதனை படத்தில் குறித்துக் காட்டுக. (ஏனையவை மாறாது?)

i) கோப்பியின் விலை அதிகரிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) நுகர்வோன் வருமானம் குறைதல்

iii) தேயிலையின் விலை அதிகரிப்பு

iv) தேயிலை உடல்நலத்துக்கு உகந்தது என மருத்துவ அறிக்கை

v) தேயிலையின் உற்பத்திக் கம்பனி தேயிலை பற்றிய தொலைக்காட்சி விளம்பரம் மேற் கொண்டமை

vi) சீனியின் விலை இரட்டிப்பாகுதல்

vii தேயிலையில் இருந்து குளிர்பானம் கண்டுபிடிப்பு

viii) தேயிலையின் விலை வீழ்ச்சி

ix) குளிர்பானத்தின் விலை வீழ்ச்சி

x) நுகர்வோன் வருமானம் ~~குறைவு~~ அதிகரிக்கிறது

xi) சனத்தொகை அதிகரிப்பு

xii) கோப்பியின் விலை வீழ்ச்சி

xiii) தேயிலையின் நுகர்வில் இருந்து கோப்பியின் நுகர்வுக்கு நுகர்வோர் மாறல்

xiv) சீனியின் விலை வீழ்ச்சி

xv) அடுத்து வரும் மாதத்தில் தேயிலையின் விலை அதிகரிக்கும் என நுகர்வோர் எதிர்பார்த்தல்.

xvi) அடுத்து வரும் வாரத்தில் தேயிலையின் விலை குறையலாம் என நுகர்வோர் எதிர்பார்க்கின்றனர்.

4) குறிப்பிட்ட சந்தை ஒன்றின் நல்லெண்ணைக்கான நிரம்பல் கோட்டினை கருதி நிரம்பல் கோட்டின் நகர்வா, நிரம்பல் கோட்டின் வழியே நகர்வா என்பதனைக் குறிப்பிடுக.

i) நல்லெண்ணை உற்பத்தியில் தொழில் நுட்ப முன்னேற்றம்

(------------------------------------ )

ii) நல்லெண்ணை மீது அரசு விற்பனை வரிவிதிப்பு

(------------------------------------ )

iii) நல்லெண்ணையின் விலை அதிகரிப்பு

(------------------------------------...)

iv) எள்ளின் விலை அதிகரிப்பு

(------------------------------------ )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v) நல்லெண்ணையின் உற்பத்தியை அதிகரிப்பது என்ற உற்பத்தியாளன் முடிவு

vi) வைத்திய ஆராய்ச்சியின்படி நல்லெண்ணை உடல்நலத்துக்கு உகந்தது என அறிவிப்பு

(————————————)

vii) நல்லெண்ணையின் விலை வீழ்ச்சி (————————)

5) பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு பொருளின் நிரம்பல் வளையி எவ்வாறு நகரும்.

## இடம், வலம், இல்லை

i) காலநிலை சாதகமாக மாறல் (————)

ii) கூட்டு நிரம்பல் பொருளின் விலை அதிகரிப்பு (————)

iii) விற்பனை வரி விதிப்பு (————)

iv) குறிப்பிட்ட பொருளின் விலை விழ்ச்சி (————)

v) தொழில் நுட்ப முன்னேற்றம் (————)

vi) உற்பத்திக் காரணிகளின் விலை அதிகரிப்பு (————)

vii) போட்டி நிரம்பல் பொருளின் விலை வீழ்ச்சி (————)

viii) காலநிலையில் பாதகமான மாற்றம் (————)

ix) உற்பத்தியாளருக்கு உதவிப்பணம் வழங்கல் (————)

x) குறிப்பிட்ட பொருளின் உற்பத்தியை அதிகரிப்பது என்ற உற்பத்தியாளன் தீர்மானம் (————)

xi) தொழில் நுட்ப விழ்ச்சி (————)

xii) உள்ளீடுகளின் விலை வீழ்ச்சி (————)

xiii) போட்டி நிரப்பல் பொருளின் விலை அதிகரிப்பு

(————)

xiv) குறிப்பிட்ட பொருளின் விலை வீழ்ச்சி

(————)

xv) உற்பத்திக் காரணிகளின் விலை வீழ்ச்சி

(————)

xvi) உள்ளீடுகளின் விலை அதிகரிப்பு (————)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xvii) குறிப்பிட்ட பொருளின் நிரம்பலைக் குறைப்பது என்ற உற்பத்தியாளன் தீர்மானம் (———————)

xviii) கூட்டு நிரம்பல் பொருளின் விலை வீழ்ச்சி (———————)

6) பின்வரும் நிரம்பல் கோடுகள் எக்கூற்றுக்களுக்குப் பொருந்தும் என்பதனைக் குறிப்பிடுக.




i) ஏனையவை மறாத நிலையில் ஒரு பொருளின் விலை அதிகரிக்க உற்பத்தியாளர் நிரம்பலையும் அதிகரிக்கின் றனர் ( )

ii) ஏனையவை மாறாத நிலையில் ஒரு பொருளின் விலை அதிகரித்த போதிலும் உற்பத்தியாளர் ஒரே அளவினை நிரம்பல் செய்தல். ( )

iii) ஏனையவை மாறாத நிலையில் குறிப்பிட்ட ஒரு விலை யில் எவ்வளவு தொகையினையும் விற்பனை செய்யக் கூடிய நிலை. ( )

7) ஒரு பொருளுக்கான நிரம்பல் வளையி தரப்பட்டுள்ளது எனக் கருதி பின்வரும் சம்பவங்கள் நிரம்பல் வளையியில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதனை வரைபடத்தில் குறித்துக் காட்டி விளக்கம் தருக. (ஏனையவை மாறவில்லை)

i) தொழில் நுட்பமுன்னேற்றம்.

ii) குறிப்பிட்ட பொருளின் விற்பனை மீது வரி விதித்தல்.

iii) போட்டி நிரம்பல் பொருளின் விலை வீழ்ச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv) குறிப்பிட்ட பொருளின் விலை அதிகரிப்பு.

vi) உள்ளீடுகளின் விலை அதிகரிப்பு.

v) குறிப்பிட்ட பொருளின் உற்பத்தியாளருக்கு அரசு மானியம் வழங்கல்.

vii) கூட்டு நிரம்பல் பொருளின் விலை வீழ்ச்சி.

viii) உற்பத்தி காரணிகளின் விலை குறைதல்.

x) குறிப்பிட்ட பொருளின் உற்பத்தியில் கையாளப்படும் தொழில் நுட்பம் குறைதல்.

xi) குறிப்பிட்ட பொருளின் விலை வீழ்ச்சி.

xii) போட்டி நிரம்பல் பொருளின் விலை அதிகரிப்பு.

xii) உள்ளீடுகளின் விலை வீழ்ச்சி.

viii) குறிப்பிட்ட பொருளின் நிரம்பலை குறைத்தல் என்ற முடிவு.

xiv) கூட்டு நிரப்பல் பொருளின் விலை அதிகரிப்பு.

xv) புதிய உற்பத்தியாளர் சந்தைக்கு வருதல்.

xvi) உற்பத்திக் காரணிகளின் விலை அதிகரிப்பு.

xvii) குறிப்பிட்ட பொருளின் நிரம்பலை அதிகரிப்பது என்ற உற்பத்தியாளன் தீர்மானம்.

xviii) தொழிலில் உள்ள சில உற்பத்தியாளர் வெளியேறுதல்.

8) பின்வரும் கூற்றுக்களின் இடைவெளிகளை நிரப்புக.

i) நுகர்வோன் வருமானம் அதிகரிக்கும் போது ஒரு பொருளின் கேள்வியும் அதிகரிப்பின் அப்பொருள் .................. ஆகும்.

ii) கௌரவ மதிப்புடைய பொருளுக்கு .................. கேள்வி காணப்படும்.

iii) Aயும் Bயும் இணைப்பு பொருட்களாயின் Aப் பொருளின் விலை குறையும் போது Bப் பொருளின் கேள்வி ..................

iv) நுகர்வோன் வருமானம் குறையும்போது ஒரு பொருளின் கேள்வி அதிகரிக்குமாயின அப்பொருள் .................. ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v) Aப் பொருளின் கேள்வி குறையும்போது Bப் பொருளின் கேள்வி அதிகரிக்குமாயின் Aயும் Bயும் ............................................ ஆகும்.

vi) X பொருளின் விலை மாற்றத்துக்கும் Y பொருளின் கேள்வி மாற்றத்துக்கும் இடையே பூச்சியத் தொடர்பு காணப்படின் X, Y .............................................. ஆகும்.

vii) Aப் பொருளின் விலை அதிகரிக்கும்போது Bப் பொருளின் கேள்வியும் அதிகரிக்குமாயின் Aயும் Bயும் .............................................

viii) நுகர்வோன் வருமானம் குறைய இழிவு பொருட்களின் கேள்வி ..............................

ix) X பொருளின் விலை குறையும் போது Z பொருளின் கேள்வி அதிகரிப்பின் Xஉம் Zஉம் ..............................

x) கூட்டுப் பொருட்களாயின் ஒரு பொருளின் விலைக்கும் மற்றைய பொருளின் கேள்விக்கும் இடையே ............................................ தொடர்பு காணப்படும்.

xi) X பொருளும் Y பொருளும் போட்டி நிரம்பல் பொருட்களாயின் X பொருளின் விலை அதிகரிக்கும் போது Yப் பொருளின் நிரம்பல் ..............................................

xii) Tப் பொருளின் விலை அதிகரிக்கும் போது Sப் பொருளின் நிரம்பல் அதிகரிக்குமாயின் Tஉம் Sஉம் ..............................................

xiii) Aபொருளின் நிரம்பல் அதிகரிக்கும் போது C பொருளின் நிரம்பலும் அதிகரிப்பின் Aயும் Cயும் ..............................................

xiv) நுகர்வோன் வருமானம் அதிகரிக்கும்போது குறிப்பிட்ட பொருளின் கேள்வி மாற்றமடையாவிடின் அப் பொருள் ..............................................

xv) Aயின் விலை அதிகரிக்க Bயின் கேள்வி அதிகரித்து Cயின் கேள்வி குறையடைய D யின் கேள்வி மாற்றமடையாது காணப்படின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aயும் Bயும் ..................................................

Aயும் Cயும் ..................................................

Aயும் Dயும் ..................................................

9) பின்வரும் கூற்றுக்கள் சரியானவையா தவறானவையா எனக் குறிப்பிடுக. (சரி / பிழை)

i) ஒரு பொருளின் விலை அதிகரிக்கும் போது மற்றொரு பொருளின் நிரம்பல் அதிகரிக்குமாயின் இவ்விரண்டு பொருட்களும் கூட்டு நிரம்பல் பொருட்களாகும். ( )

ii) Aயின் கேள்வி அதிகரிக்கும்போது B பொருளின் கேள்வி குறையுமெனில் இரண்டு பொருட்களும் கூட்டு பொருட்களாகும். ( )

iii) X பொருளின் விலை அதிகரிக்கும் போது Y பொருளின் கேள்வியும் அதிகரிக்கின்றது எனின் இரண்டு பொருட்களும் பதிலீட்டுப் பொருட்களாகும். ( )

iv) கௌரவ மதிப்புடைய பொருகட்ளுக்கு புறநடை கேள்வி காணப்படும். ( )

v) வருமானத்துக்கும் ஒரு பொருளின் கேள்விக்கும் இடையில் நேரான தொடர்பு காணப்படுமாயின் அப்பொருள் சாதாரண தரப் பொருள் ( )

vi) இழிவுப் பொருட்களாயின் வருமானத்துக்கும் கேள்விக்கும் இடையில் நேரான தொடர்பு காணப்படும். ( )

vii) இழிவுப் பொருட்களே கிபன் பொருட்கள் எனப்படுகின்றது. ( )

viii) கிபன் பொருட்களுக்கு வருமானம் அதிகரிக்க கேள்வியும் அதிகரிக்கும். ( )

ix) ஏனையவை மாறாத போது குறிப்பிட்ட ஒரு பொருளின் விலை குறையும்போது நுகர்வோன் மெய்வருமானம் அதிகரிக்கும் ( )

x) ஏனையவை மாறாத போது ஒரு பொருளின் விலைமாற்றம் கேள்விக் கோட்டின் வழியே நகர்வை ஏற்படுத்தும். ( )

10) சரியான விடையின் கீழ் கோடிடுக.

i) எல்லைப் பயன் கோட்பாட்டுடன் தொடர்புடையவர்

1) மார்ஷல் 2) மிர்டால் 3) பிகு 4) மிர்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) நிறைபோட்டி சந்தையில் உள்ள விற்பனையாளன்

1) விலை எடுப்போன் 2) விலை தீர்மானிப்போன்
3) விலை உருவாக்குவோன் 4) விலைத் தொடர்பாளன்

iii) நுகர்வோன் ஒருவனின் வருமானம் 600 ரூபாவிலிருந்து 720 ரூபாவாக உயரும்போது கேள்வியின் வருமான நெகிழ்ச்சிக் குணகம் —0.5 ஆயின் கேள்வித் தொகை 20 அலகிலிருந்து என்ன அளவாக மாறும்.

1) 2 அலகால் குறையும் 2) 10 அலகால் குறையும்
3) 20 அலகால் அதிகரிக்கும் 4) 2 அலகால் கூடும்

iv) குறிப்பிட்ட சந்தை ஒன்றில் பொருள் ஒன்றுக்கு நுகர்வோர் 200 அலகுகளுக்கு கேள்வியை ஏற்படுத்தியிருந்தனர். எனினும் விலை மாற்றத்துக்கு ஏற்ப கேள்வியிலும் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தனர். எவ்விலையில் புள்ளி நெகிழ்ச்சி ஒருமையாகும்.

1) 120 2) 150 3) 1200 4) கூறமுடியாது

v) ஒரு பண்டத்தின் விலை 25/- ஆக இருக்கையில் அப்பொருளின் மீதான நுகர்வோன் செலவு 7500/- ஆகும் இப்பொருளின் விலை 20% இனால் குறைக்கப்படும் போது அதன் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் 2 ஆயின் அப்பண்டத்தின் நுகர்வோன் செலவு என்னவாகும்

1) 6000 2) 7000 3) 2400 4) எதுவுமில்லை

vi) நுகர்வோன் செலவு வளையியானது நிலைக்குத்தச்சுக்கு சமாந்தரமாக செல்லும் போக்கினை கொண்டதாக காணப்படின் கேள்வி நெகிழ்ச்சிபற்றி யாது கூறமுடியும்

1) நெகிழ்ச்சி வாய்ந்தது 2) ஒருமை நெகிழ்ச்சி
3) பூரண நெகிழ்ச்சி 4 பூச்சிய நெகிழ்ச்சி

vii) கேள்விக் கோட்டின் சரிவானது 1/20 ஆக காணப்பட்ட போது 1750 அலகுகளுக்கு விலை ஏதும் ஏற்படவில்லை எனின் ஒருமை நெகிழ்ச்சிக்குரிய விலை என்னவாகும்

1) 97–50 2) 100 3) 87-50 4) கூறமுடியாது

viii) பொருளாதார உறுதியை நிலைநாட்ட அரசு மானியம் வழங்கல் அவசியமாகும் எனினும் செலவினை இழிவு படுத்த அரசு எத்தகைய உத்தியைக் கையாளமுடியும்

1) கேள்வி நெகிழ்ச்சி வாய்ந்த பொருளுக்கு மானியம் வழங்கல்

2) கேள்வி நெகிழ்ச்சியற்ற பொருளுக்கு மானியம் வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) மிகை நிரம்பலை கொள்வனவு செய்தல்
4) மானிய அளவைக் குறைத்தல்

ix) ஒரு பொருளின் விலை குறைய கேள்வி அதிகரிக்கக் காரணம்
1) புதிய நுகர்வோன் சந்தைக்கு வருதல்
2) விலை குறைய உற்பத்தி அதிகரித்தல்
3) விற்பனையாளர் அதிகளவில் விற்பனை செய்தல்
4) ஏற்கனவே சந்தையில் உள்ள நுகர்வோர் கூடுதலாக பொருட்களை கொள்வனவு செய்தல்
1) 1,4   2) 3   3) 3,4   4) எதுவுமல்ல

x) நுகர்வோன் வருமானம் அதிகரிக்க குறிப்பிட்ட பொருளுக்கான கேள்வி அதிகரிக்கக் காரணம
1) இணைப்புப் பொருள்   2) இழிவுப் பொருள்
3) ஆடம்பரப் பொருள்   4) சாதாரண தரபபொருள்

11) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) ஓரினத்தன்மையுடைய பொருள் என்பது
i) நிறை போட்டி சந்தையின்
ii) தனியுரிமைச் சந்தையின்
iii) சிலருரிமைச் சந்தையின்
iv) இம்மூன்று சந்தை அமைப்புக்களினதும் பண்பாகும்.

2) சந்தை சமநிலை என்பது
i) உச்சபயன், உச்ச இலாப நோக்கமுடைய நுகர்வோரும், உற்பத்தியாளரும் சமநிலையடையும் நிலை.
ii) மிகை கேள்வியோ, மிகை நிரம்பலோ, அற்ற நிலையாகும்.
iii) கேள்விக்கோடும் நிரம்பல்கோடும் ஒன்றை ஒன்று வெட்டும் நிலையில் ஏற்படுவது
iv) மேலே கூறிய மூன்றும் சரியானவை

3) கேள்விக் கோடானது நுகர்வோனின் சந்தை நடத்தையை புலப்படுத்துவதாகும்.   (ஆம் / இல்லை)

4) கேள்வியும் நிரம்பலும் விலையை நிர்ணயிக்கும் நிலையை உரிய வரிப்படம் ஒன்றினால் காட்டுக.

5) கேள்வி மாற்றத்தை ஏற்படுத்தும் காரணிகள் 4 தருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) கேள்வியும், நிரம்பலும் சமனாக அதிகரிப்பின் புதிய சம நிலையில் சந்தை சமநிலை விலை ———————————— இருக்கும்

பின்வரும் கூற்றுக்களுக்கு உரிய வரைபடம் வரைக.

7) சந்தை சமநிலையில் பிரதியீட்டு பொருளின் விலையிலான வீழ்ச்சி ஏற்படுத்தும் தாக்கம்

8) கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் 2 எனக் காணப்படும் நிலை

9) A,B ஆகிய தனிநபர் கேள்வி விலைகள் முறையே

| P | A | B |
|---|---|---|
| 5 | 50 | 30 |
| 10 | 25 | 20 |
| 15 | 0 | 10 |

10) X என்ற பண்டத்துக்கு எல்லைப் பயன் அடிப்படையில் 10/- செலுத்த விரும்பும் நுகர்வாளன் சந்தையில் குறித்த பண்டத்தினை 6/- விலையில் கொள்வனவு செய்வதன் மூலம் நுகர்வோன் மிகையானது 4/- ஆக உள்ள நிலைமை

11) QD = 2000 — 20p என்ற கேள்விச் சார்பில் விலை10/-, 20/- ஆயின் கேள்வித் தொகையினைக் கணிப்பிட்டு கேள்விக் கோட்டினை வரைக

12)

| விலை | நுகர்வுச் செலவு |
|---|---|
| 4 | 4000/- |
| 8 | 2400/- |

13) அத்தியாவசியப் பொருட்களுக்கான கேள்விக்கோடுகுறித்த கட்டம் வரை அதிகரித்து ஒரு கட்டத்தில் உச்சநிலை யடைந்து பின் ... ———————— செல்லும்

14) கேள்விச் சமன்பாட்டு மூலமான முடிவுகள் ———————— ———————— தன்மை வாய்ந்தனவாகும்.

15) கேள்விக் கோட்டின் வழிச் செல்லும் அசைவு என்பது ———————————— புலப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16) கேள்வி குறைவடைதல் என்பதனை வரைபடம் மூலம் காட்டுக

17) கேள்வி விதி என்பதனை விளக்குக

18) பதிலீட்டு விளைவு என்பது யாது

19) பின்வாங்கும் விலைகள் என்பது ................................ னால் தீர்மானிக்கப்படும்.

20) வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் எப்போதும் நேர்க்கணியமாகவே காணப்படும். (ஆம் / இல்லை)

# நெகிழ்ச்சித் தத்துவம்

12) 1) 10/- விலையில் கேள்வித் தொகை 200 அலகுகளாகும் கேள்விக் கோட்டின் சரிவு 1/20 ஆகும். எனின் 5/- விலையில் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியை மதிப்பிடுக.

2) சந்தை விலை 8/- ஆயின் கேள்வித் தொகை 0 ஆகும். 2/- இனால் விலை மாறினால் கேள்வித் தொகையும் அதே அளவினால் மாறும்.

i) 0 விலை வரை கேள்வி அட்டவணை தயாரிக்க

ii) கேள்விக் கோட்டினை வரைக

iii) ஒவ்வொரு விலையிலும் கேள்வி நெகிழ்ச்சியை மதிப்பிடுக

iv) இதிலிருந்து பெறக்கூடிய முடிவு யாது?

3) சந்தை விலை 40/- 80/- ஆக இருந்த போது கேள்வியும் முறையே 1600, 800 அலகுகளாகக் காணப்பட்டது

i) ஒவ்வொரு விலையிலும் புள்ளி நெகிழ்ச்சியை மதிப்பிடுக.

ii) ஒவ்வொரு விலையிலும் விளைவு நெகிழ்ச்சியை மதிப்பிடுக.

iii) பெறப்படும் முடிவுகளை பரிசீலனை செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) ஒரு பண்டத்தின் விலை 25/- ஆக உள்ள போது நுகர்வோன் செலவு 7500/– ஆகும். இப்பொருளின் விலை 20% இனால் குறையும்போது கேள்வி நெகிழ்ச்சி 2 ஆயின் அப்பண்டத்தின் மீதான நுகர்வோன் செலவினம் யாது?

5) கொடுக்கப்பட்ட ஒரு சூழ்நிலையில் X இன் விலை 10/- ஆக இருக்கும் போது மொத்த விற்பனைகள் 1500/- ஆக இருக்கும் என்றும் விலை 12/- ஆக இருக்கும் போது மொத்த விற்பனைகள் 1560/- ஆக உயருமென்றும் வைத்துக் கொள்க. அலகு ஒன்றுக்கு 10/- விலையில் X இற்கான விலைசார் கேள்வி நெகிழ்ச்சியைக் கணித்து கேள்வி நெகிழ்ச்சியானதா? நெகிழ்ச்சியற்றதா எனக் கூறுக? 6/- விலையில் கேள்வி நெகிழ்ச்சி யாது?

6) அதிபர வளையியைக் கொண்ட கேள்வி வளையும் உள்ளது எனக் கொள்க. விலை 15/- ஆயின் அப்பண்டத்தின் மீதான நுகர்வோன் செலவு 900 ரூபாவாகும் எனவே கேள்வித் தொகை 100 அலகுகளாயின் அப்பொருளுக்கான விலை யாது?

பின்வரும் அட்டவணையின் இடைவெளிகளை நிரப்புக.

| விலை நெகிழ்ச்சி | விலை மாற்றம் | நுகர்வோன் செலவில் மாற்றம் |
|---|---|---|
| $\epsilon D < 1$ | குறைதல் | ............ |
| ............ | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| $\epsilon D = 1$ | அதிகரிக்கும்/குறையும் | ............ |
| $\epsilon D > 1$ | ............ | குறையும் |
| $\epsilon D = 0$ | குறையும் | ............ |

7) பின்வரும் பண்டங்களின் நெகிழ்ச்சியைக் இனம் காண்க.

i) சவர்க்காரம் ii) கோவா iii) இறைச்சி

iv) மரக்கறி v) கோழி இறைச்சி vi) உப்பு

vii) மண்ணெய் viii) கொக்கோ கோலா

ix) மதுபானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) குறிப்பீட்ட ஒரு பண்டத்தின் விலை 10/- இலிருந்து 15/- ஆக மாறும் போது கேள்வித் தொகையும் 2000 — 1000 அலகாக குறைந்தது. இப் பண்டத்துக்கான நெகிழ்ச்சி ஒன்றுக்கு சமனானது என்பது எந்தளவுக்கு பொருத்தமானது. விளக்குக.

9)

| பண்டங்கள் | A | B |
|---|---|---|
| கேள்வி நெகிழ்ச்சி | 0.5 | 1.5 |
| விலை | 05/- | 25/- |

i) A, B ஆகிய பண்டங்களின் விலை 1/- % இனால் உயர்த்தப்படுமாயின் இப்பண்டம் சார்பாக வருமான உச்சப்படுத்தல் எந்த அளவுக்கு வெற்றியளிக்கும்? விளக்குக.

ii) நுகர்வோன் செலவில் எத்தகைய மாற்றம் ஏற்படும்

10)

| விலை | X இன் கே/தொகை | Y இன் கே/தொகை |
|---|---|---|
| 50 | 150 | 500 |
| 100 | 120 | 250 |

i) X, Y இன் கேள்வி நெகிழ்ச்சியை மதிப்பிடுக

ii) இவற்றுள் பதிலீடுகள் கூடிய பண்டம் எது? ஏன்?

11) அச்சுவேலிச் சந்தையில் மாதாந்தம் 200 தொன் வீதப் படியான செத்தல் மிளகாய்க்கான நெல் வழங்கல் முற்றாக நெகிழ்ச்சியற்றது எனக் கொள்க. வர்த்தகர் சங்கம் செத்தல் மிளகாய்க்கான விலை ஆதரவுத் திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு மிளகாயின் விலையை 120/- ஆக பேண வேண்டுமாயின் 75 தொன் மிளகாயை கொள்வனவு செய்ய வேண்டும் விலையை 60/- வாகக் குறையவிடின் 25 தொன் மேலதிகமாக கோரப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i) கேள்வி, நிரம்பல் அட்டவணை தயாரிக்குக.

ii) 90/- விலையில் கேள்வி நிரம்பல் நெகிழ்ச்சியை மதிப்பிடுக.

iii) எவ்விலையில் நெகிழ்ச்சி 1 க்கு சமனாகும்

12) ஒரு பொருளின் கேள்வி நிரம்பல் அட்டவணை வருமாறு தரப்படுகின்றது.

| விலை | கேள்வித் தொகை | நிரம்பல் தொகை |
|---|---|---|
| 16 | 20 | 70 |
| 15 | 24 | 60 |
| 14 | 30 | 30 |
| 13 | 40 | 24 |
| 12 | 50 | 16 |
| 11 | 60 | 8 |
| 09 | 70 | 4 |

(கேள்வி, நிரம்பல் கோடுகள் தேவையற்றன)

i) சமநிலை விலை, தொகை என்பவற்றை கணிப்பிடுக

ii) அரசு ஒரு அலகுக்கு 3/- வினை அலகு வரியாக விதிப் பின் புதிய சமநிலை யாது?

iii) இவ்வரியினால் அரசு பெற்ற மொத்த வரிவருமானம் யாது?

iv) ஒரு அலகுக்கு நுகர்வோர் செலுத்தும் வரி யாது?

v) ஒரு அலகுக்கு உற்பத்தியாளர் செலுத்தும் வரி யாது?

vi) ஆரம்ப நிலையில் அரசு அலகுக்கு 2/– வினை உதவிப்பணமாக வழங்கின் புதிய சமநிலை யாது?

vii) அரசுக்கு ஏற்படும் மானியச் செலவு யாது?

viii) ஒரு அலகுக்கு நுகர்வோனுக்கு கிடைத்த மானியம் யாது?

ix) ஒரு அலகுக்கு உற்பத்தியாளனுக்கு கிடைத்த மானியம் யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

x) ஆரம்ப நிலையில் 13/- வினை உயர்ந்த பட்சக் கட்டுப்பாட்டு விலையாக நிர்ணயிப்பின் ஏற்படக்கூடிய மிகைக் கணியம் யாது? இதனால் ஏற்படக்கூடிய கள்ளச் சந்தை விலை என்ன?

xi) ஆரம்ப சமநிலையில் 15/- வினை அரசு குறைந்த பட்சக் கட்டுப்பாட்டு விலையாக நிர்ணயித்தால் ஏற்படக்கூடிய மிகைக் கணியம் யாது? இதனால் அரசுக்கு எவ்வளவு தொகையை கொள்வனவு செய்த செலவு யாது?

13) மோகனும் ராஜனும் கம்பனி ஒன்றின் ஊழியர்கள் கம்பனி ஊழியர்களின் வேதனத்தை அதிகரித்த போது மோகன் குறிப்பிட்ட பண்டத்துக்கான கேள்வியை அதிகரிக்க ராஜன் அப்பண்டத்துக்கான கேள்வியை குறைத்துக் கொண்டான்.

i) இருவரில் யார் உயர் பதவியில் உள்ளனர்.

ii) இருவரினதும் வருமானம் தொடர்பில் கேள்வி நெகிழ்ச்சியை விளக்குக.

iii) இப்பண்டம் என்ன வகையான பண்டம்

14) X என்ற நுகர்வோன் தனது வருமானம் அதிகரித்த போது A B C D E ஆகிய பண்டங்கள் மீது ஏற்படுத்திய கேள்வி வருமாறு

| வருமானம் | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 2000 | 500 | 500 | 500 | 500 | 500 |
| 3000 | 1000 | 700 | 750 | 300 | 500 |

(கேள்வி அலகுகளிலும் வருமானம் ரூபாவிலும் தரப்படுமாறு)

i) ABCDE ஆகிய பண்டங்களின் வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியை கணிப்பிடுக.

ii) இப்பண்டங்களை இனம் காண்க?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii) வருமானம் அதிகரிப்பால் இப்பண்டங்கள் மீது நுகர்வோன் செலவு எவ்வாறு மாற்றமடையும் என்பதனை விளக்குக?

iv) வருமானம் சரர் கேள்விக் கோடுகளை வரைக

15) X என்ற பண்டம் ஒன்றின் விலையில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாக YZPQ ஆகிய பண்டங்கள் மீது நுகர்வோன் ஏற்படுத்திய கேள்வி வருமாறு

| X இன் விலை | Y இன் கேள்வி | Z இன் கேள்வி | P இன் கேள்வி | Q இன் கே. |
|---|---|---|---|---|
| 10 | 200 | 200 | 200 | 200 |
| 15 | 350 | 250 | 125 | 200 |

i) YZPQ ஆகிய பண்டங்களின் பின்னிய நெகிழ்ச்சியை கணிப்பிடுக?

ii) பண்டங்களை இனம் காண்க

iii) பண்டங்களுக்கான குறுக்கு கேள்விக் கோட்டை வரைக

16) குறிப்பிட்ட சந்தை ஒன்றில் நுகர்வோர் இறைச்சிக்கு ஏற்படுத்தும் கேள்வி பற்றிய விபரம் வருமாறு

கேள்வியின் வருமான நெகிழ்ச்சி = 0.5

கேள்வியின் விலை நெகிழ்ச்சி = 1.5

கோழி இறைச்சியின் விலை தொடர்பில் குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி + 2.0 ஆகும். இப்புள்ளி விபரங்கள் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாதெனச் சுருக்கமாக விளக்குக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தகால பரீட்சை வினாக்கள்

13) 1) போட்டிச் சந்தை ஒன்றில் விற்கப்படும் ஒரு பண்டம் தொடர்பான நிரம்பற் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஒரு அலகின் விலை (ரூபா) | 4 | 6 | 8 | 10 | 12 | 14 |
| வழங்கப்பட்ட அளவு(அலகுகள்) | 0 | 20 | 40 | 60 | 80 | 100 |

இப்பண்டத்தின் ஒவ்வொரு அலகிற்கும் அரசாங்கம் இரண்டு ரூபா வீதம் வரி அறவிட்டுள்ளதெனக் கருதிக் கொள்க.

i) வரி அறவிடப்பட்ட பின்னரான நிரம்பற் பட்டியலைக் காட்டுக.

ii) வரி அறவிடப்பட்ட பின்னர் எந்நிலைமைகளின் கீழ் சந்தை விலை மாறாதிருக்கும்?

iii) எந்நிலைமைகளின்கீழ் வரித் தொகையினால் சந்தை விலை அதிகரிக்கும்? (வரிப்படங்கள் அவசியமில்லை)

2) ஒரு நிறை போட்டிச் சந்தையில் கொடுக்கப்பட்ட ஒரு விற்பனைப் பொருளின் ஒவ்வொரு அலகின் மேலும் அரசு ஒரு ரூபாவை விற்பனை வரியாக அறவிடுகின்றது எனக் கொள்க.

i) இவ்வரியானது அப்பொருளின் அளிப்பு வளைகோட்டில் எவ்வித தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை விளக்குக. உமது விடையை வரிப்படத்தின் உதவியைக்கொண்டு விளக்குக.

ii) கேள்வி வளைகோட்டில் மாற்றம் ஏற்படாவிட்டால் இப்பொருளின் சந்தை விலையில் என்ன தாக்கம் ஏற்படும்?

iii) சாதாரண கேள்வி அளிப்பு வளைகோடுகள் அடிப்படையில் விற்பனை வரியின் சுமையானது விற்பனையாளர்களாலும் கொள்வனவாளர்களாலும் ஏற்கப்படுகின்றது எனக் கூறப்படுகின்றது. ஒரு வரிப்படத்தை பயன்படுத்தி இக்கூற்றை விளக்குக.

vi) விற்பனையாளர்கள் இவ்வரிச் சுமைப் பெயர்ச்சியை முழுமையாகக் கொள்வனவாளர் மேல் ஏற்படுத்தலாமா? அவ்வாறாயின் எச்சந்தர்ப்பங்களில்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) பின்வரும் கூற்றினை நீர் ஏற்றுக்கொள்கின்றீரா? உமது விடைக்குக் காரணம் காட்டுக.

i) ஒரு பண்டத்திற்கான வரியானது இப்பண்டத்தினது விலையை விகிதசமமாக அதிகரிக்கச் செய்யும் (1992)

4) முன்னரிலும் பார்க்க உயர்ந்த வரி வருமானத்தை எதிர் பார்த்து அரசாங்கம் குறிப்பிட்டதொரு பண்டத்திற்கு விதிக்கப்பட்ட வரியை உயர்த்தியது. எனினும் வரி வரு மானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டது. எச்சந்தர்ப்பத்தில் இது நிகழக்கூடும். (1987)

5) இலங்கையானது தற்போது சம்பா அரிசியை இறக்குமதி செய்கின்றது எனக் கருதுக.
இறக்குமதி செய்யப்படும் ஒவ்வொரு கிலோகிராம் சம்பா அரிசி மீதும் ஒரு ரூபா இறக்குமதி வரியை விதித்தற்கு அரசாங்கம் தீர்மானிக்கின்றது. இத்தீர்மானம் காரணமாக இலங்கையின் அரிசிச் சந்தையில் ஏற்படக்கூடிய மாற்றங் கள் யாவை? (1996)

6) i) ஒரு பண்டத்தின் மீது விற்பனை வரி விதிக்கப்படு வதற்கான காரணங்கள் யாவை?

ii) விற்பனை வரியினது பொருளாதார விளைவுகளைச் சுருக்கமாகத் தருக
(1991 விசேட பரீட்சை)

7) குறிப்பிட்ட ஒரு கைத்தொழிலினால் உற்பத்தி செய்யப் படும் ஒரு பண்டத்தின் அலகு ஒன்றிற்கு ஒரு ரூபா வீதம் உதவிப் பணம் கொடுக்க அரசாங்கம் முடிவு செய்கின்றது சந்தை நிறை போட்டியுள்ளதென்றும் சந்தை நிரம்பல் வளையி மேல்நோக்கிச் சாயும் ஒரு நேர்கோடென்றும் எடுத்துக் கொள்க. வரிப்படங்களைப் பயன்படுத்தி பின் வருவனவற்றிற்கு விடை தருக.

i) உதவிப் பணம் எவ்வாறு சந்தை நிரம்பல் வளையியைப் பாதிக்கின்றது?

ii) உதவிப் பணத்தின் முழு நன்மையையும் நுகர்வோர் பெறுவதற்குச் சந்தைக் கேள்வியின் இயல்பு எவ்வாறு இருத்தல் வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii) எவ்வகையான சந்தைக் கேள்வியின்கீழ் உற்பத்தியாளர் உதவிப் பணத்தின் முழு நன்மையையும் பெறுவார்கள்? (1982)

iv) எவ்வகையான சந்தைக் கேள்வியின் கீழ் இரு கட்சியாளரும் உதவிப் பணத்தின் ஒரு பங்கைப் பெறுவார்கள்? (1982)

8) i) குறித்த ஒரு பண்டத்தின் உற்பத்தியாளருக்கு அரசாங்கமானது உதவிப்பணம் வழங்குகின்றது எனக் கருதுக அரசாங்கம் இவ்வாறு தலையிடுவதற்கான காரணம் என்ன?

ii) இவ்வாறு உதவிப்பணம் வழங்குவதன் பொருளாதார விளைவுகள் யாவை?

(1992 விசேட பரீட்சை)

9) போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் பண்டத்தின் உச்ச விற்பனை விலையை அரசாங்கம் நிலைப்படுத்துகின்றது நிலைப்படுத்திய விலை சமநிலைச் சந்தை விலையிலும் குறைவானது என வைத்துக் கொள்க.

i) இந்நிலைமையை ஒரு வரிப்படத்தில் விளக்குக.

ii) இந்த விலைக் கட்டுப்பாட்டின் விளைவுகள் பற்றி என்ன கூறுவீர்? (1981)

10) பின்வரும் கூற்றினை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? உமது விடைக்குக் காரணம் காட்டுக.

i) உச்ச விலையானது சமநிலை விலையிலும் குறைவாக நிர்ணயிக்கப்படுவது நுகர்வோனுக்கு எப்போதும் நன்மை பயக்கும். (1992)

11) அரசாங்கம் ஒரு பண்டத்தின் அடித்தள விலையை சமசந்தை விலையிலும் பார்க்க உயர்ந்த ஒரு மட்டத்தில் நிலைப்படுத்துகின்றது. இந்தக் கொள்கையின் பொருளாதார விளைகவுளாக வருபவை யாவை. ஒரு விளக்கப் படத்தினை உதவியோடு விளக்குக. (1981)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) ஒரு போட்டிச் சந்தையிலுள்ள வழங்குநர் ஒன்று சேர்ந்து குறிப்பிட்டதொரு பண்டத்தின் விற்பனை தொடர்பாக இழிவளவான ஒரு விலையை நிர்ணயிப்பதில் உடன்பாட்டிற்கு வருகின்றனர் எனக்கொள்க எனினும் இவ் விலையில் மிகை வழங்கல் ஏற்படுகின்றது.

i) மேற்கூறப்பட்ட நிலைமையை ஒரு வரிப்படத்தில் காட்டுக.

ii) மிகை வழங்கல் காணப்படும் இத்தகையதொரு நிலைமையில் வழங்குநரின் சாத்தியமான நடத்தை பற்றி நீர் யாது கூற முடியும்? (1987)

13) வர்த்தகர்களின் சங்கம் ஒன்று. தனது உறுப்பினர் பண்டம் ஒன்றை விற்கவேண்டிய இழிவளவான விலையை நிர்ணயித்துள்ளது எனக்கருதிக் கொள்க. இத்தகையதொரு நிலைமையின்கீழ் போட்டிச் சந்தையொன்றில் எத்தகைய மாற்றங்கள் நிகழும்?

14) i) ஒரு பொருளின் விலை அலகுக்கு 6 ரூபாவாக இருக்கும்போது மிகைக்கேள்வியோ அல்லது மிகைநிரம்பலோ இல்லை என எடுத்துக்கொள்க.
9 ரூபா விலையில் கேள்வித் தொகை 50 அலகுகளாக இருக்க 300 அலகுகள் மிகை நிரம்பல் காணப்படுகிறது. 2 ரூபா விலையில் 400 அலகுகளுக்குக் கேள்வி ஏற்படுகின்றது கேள்வி நிரம்பல் கோடுகளை நேர்கோடுகள் எனக் கருதி வரைபடத்தாள் ஒன்றில் வரைந்து சமநிலைத் தொகையை எடுத்துக் காட்டுக.

ii) இப்போது இந்தப் பொருள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதோடு இறக்குமதி செய்யப்படுகின்றது எனக் கொள்க. இறக்குமதி செய்யப்பட்ட பொருள் அலகு ஒன்று 4 ரூபா வீதம் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இந்த விலையில் எந்த அளவான தொகைக்கு கேள்வி ஏற்படும்?
பொருளில் எந்த அளவு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு நிரம்பல் செய்யப்படும்? பொருளில் எந்தளவு? இறக்குமதி செய்யப்படும்?
(1980)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15) சந்தையில் குறிப்பிட்டதொரு பண்டம் தொடர்பாகப் பின்வருவன முறையே கேள்வி வழங்கல் வளையிகளில் இரண்டு புள்ளிகள் எனக் கொள்க

| விலை (ரூபா) | கேள்வித்தொகை (அலகுகள்) | வழங்கல்தொகை (அலகுகள்) |
|---|---|---|
| 1 | 2000 | 200 |
| 20 | 50 | 3000 |

i) நேர்கோட்டுத் தன்மை உள்ளது எனக்கொண்டு வரைபுத்தாளில் கேள்வி வழங்கல் வளையிகளை வரைக.

ii) சமநிலை விலையையும் தொகையையும் காண்க

iii) சமநிலை விலையில் கேள்வி நெகிழ்ச்சி என்ன?

iv) கேள்வியின் விலை நெகிழ்ச்சி எவ்விலையில் ஒன்றுக்கு சமமாக அமையும்?

v) தொகை 500 அலகுகளாக இருக்கும்போது கேள்வி விலை என்ன?

vi) தொகை 1800 அலகுகளாக இருக்கும்போது வழங்கல் விலை என்ன?

vii) சமநிலை விலையில் நுகர்வோர் மிகையை ரூபாவில் அளக்கவும்

viii) அறவிடத்தக்க ஆகக் கூடிய விலை ரூபா 7 என அரசாங்கம் விதிக்கும் பட்சத்தில் அவ்விலையில் சந்தையில் நிலவக்கூடிய மேலதிக கேள்வியைக் கணக்கிடுக. (1985)

16) ஒரு பண்டம் சம்பந்தமான கேள்வி வளையியும் வழங்கல் வளையியும் நேர்கோடுகளென வைத்துக் கொள்க. ரூபா 20 விலையில் கேள்வியின் நெகிழ்ச்சி 2/- ஆகவும் வழங்களின் நெகிழ்ச்சி 1 ஆகவும் உள்ளன, இந்த விலையில் 200 அலகுகள் கேட்கப்பட்டு 400 அலகுகள் வழங்கப்படுகின்றன.

i) அலகொன்றின் விலை ரூபா 10 ஆக இருக்கையில் கேட்கப்பட்ட தொகையளவையும் வழங்கப்பட்ட தொகையளவையும் கணிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) கேள்வி வழங்கல் வளையிகளின் உதவியுடன் சமநிலை விலையையும் தொகையளவையும் கணிக்க. (1984)

17) ஆண்டொன்றுக்கு 150 மில்லியன் புசல் வீதப்படியான நெல் வழங்கல் முற்றாக நெகிழ்ச்சியற்றதென வைத்துக் கொள்க. தற்போது அரசாங்கம் நெற் சந்தையில் விலை ஆதரவுத் திட்டமொன்றை செயற்படுத்தி வருகின்றது. அரசாங்கத்தின் மதிப்பீடுகளின் படி நெல்லின் விலையை புசல் ஒன்றுக்கு 100 ரூபா ஆகப் பேணிவரவேண்டுமாயின் அரசாங்கம் ஆண்டொன்றுக்கு 50 மில்லியன் புசல் நெல் லைக் கொள்வனவு செய்தல் வேண்டும், அவ்வாறே சந்தை விலையை ரூபா 60 ஆக வீழ்ச்சியடையவிட்டால் 30 மில்லியன் புசல் மிகையாகக் கேட்கப்படுமெனவும் மதிப்பிட்டுள்ளது.

i) சந்தைக் கேள்வி வளையி ஒரு நேர்கோடாயுள்ளதென வைத்துக்கொண்டு பொருத்தமான கேள்வி வளையி யையும், வழங்கல் வளையியையும் வரைபடத்தாளில் வரைக.

ii) அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் சந்தையில் நிலவக்கூடிய சமநிலை விலையை மதிப்பிடுக.

1) ரூபா 50 இலும் 2) ரூபா 80 இலும் கேள் வியின் விலை நெகிழ்ச்சியைக் கணிக்குக.

iii) மற்றவை எல்லாம் மாறாநிலையில் இருக்க கேட்கப் படும் தொகையளவு ஒவ்வொரு விலையிலும் 10 சத வீதம் அதிகரிக்குமாயின் புதிய சமநிலையைக் கணிக்குக. (1989)

18) போட்டி சந்தை ஒன்றில் விற்கப்படும் ஒரு பண்டத்திற் கான நேர்கோட்டு வழங்கல் வளைகோடு நேர்கோட்டுக் கேள்வி வளைகோடு என்பவற்றைக் கருத்திற்கொள்க. ஒரு அலகிற்கு 5 ரூபாப்படி 10 அலகுகளுக்கு மிகைக் கேள்வி உண்டு ஒரு அலகிற்கு 10 ரூபாப்படி மிகைக் கேள்வி —30 அலகுகளாகும். மிகைக் கேள்வி வளை கோட்டை ஒரு வரிப்படத்தில் வரைந்து சமநிலைச் சந்தை விலையைக் காட்டுக. (1988)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19) பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் பண்டத்திற்கான நேர்கோட்டு நிரம்பல் வளைகோட்டையும் நேர்கோட்டுக் கேள்வி வளைகோட்டையும் வரைக.

| விலை (ரூபா) | மொத்தக் கேள்வி அளவு (அலகுகள்) | உள்நாட்டு உற்பத்தியாளர்களினால் வழங்கப்பட்ட அளவு (அலகுகள்) |
|---|---|---|
| 32 | 45 | 0 |
| 48 | 25 | 35 |

i) ஒரு 0.5 டொலர் என்ற அடிப்படையில் இப்பண்டம் எவ்வளவு வேண்டுமானாலும் இறக்குமதி செய்யப்படலாம் எனக் கருதிக்கொள்க. ஒரு டொலரின் பெறுமானம் ரூபா 32 ஆகுமெனின் சமநிலை அளவு யாது?

ii) ரூபாவானது பெறுமதியிறக்கத்திற்கு உள்ளாகியிருக்கின்றது என்றும் டொலரின் பெறுமானம் ரூபா 40 ஆக உயர்ந்துள்ளது என்றும் கருதிக் கொள்க. புதிய சமநிலை அளவு யாது?

iii) டொலரைப் பெறுமதியிறக்கம் செய்வதற்குப் பதிலாக அரசாங்கம் இப்பண்டத்தின் இறக்குமதி விலையின் மீது 25 சதவீத இறக்குமதி வரியை விதித்துள்ளது எனக்கருதிக்கொள்க. இந்நிலைமையின் கீழ் ஏற்படும் மாற்றங்கள் யாவை?

iv) இப் பண்டத்தின் உற்பத்தியை உள்நாட்டில் மேற்கொள்ளும்படி தனியார் முயற்சியினை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் யாவை?

(இறக்குமதிகள் தடைசெய்யப்படமாட்டா எனக் கருதிக் கொள்க.) (1989)

20) போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் ஒரு பண்டம் தொடர்பாகப் பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன.

| விலை (ரூபா) | உள்நாட்டு வழங்கல் (அலகுகள்) | மிகைக் கேள்வி (அலகுகள்) |
|---|---|---|
| 5 | 1000 | 4000 |
| 20 | 4000 | -2000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கல் வளைகோடும் கேள்வி வளைகோடும் நேர் கோடுகள் எனக் கொண்டு

i) சந்தைக் கேள்வி வளைகோட்டை விளக்கப்படம் ஒன்றிற் காட்டுக.

ii) சந்தைச் சமநிலை விலையையும் தொகையையும் விளக்கப்படம் ஒன்றிற் காட்டுக.

iii) இப்பண்டத்தின் ஓர் அலகிற்கான உச்ச விற்பனை விலையை ரூபா 12 என அரசாங்கம் நிர்ணயித்தால் சந்தைத் தொழிற்பாடுகள் எவ்வாறு மாறும்?

iv) இப்பண்டம் இறக்குமதி செய்யப்பட்டால் அவசியப் படும் முழு அளவையும் மாறாநிலையிற் பெற்றுக் கொள்ள முடியும். இத்தகைய சூழ்நிலைகளின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பண்டத்தின் ஓர் அலகின் உள்ளூர் (தேசிய) சந்தை விலை ரூபா 12 ஆக அமையுமெனக் கொள்க. இப்படியாயின் பண்டத்திற் கான மொத்தச் சந்தைக் கேள்வியில் எவ்வளவு உள்நாட்டு உற்பத்திமூலம் வழங்கப்படும்? பண்டத் துக்கான மொத்தச் சந்தைக் கேள்வியில் எவ்வளவு இறக்குமதியின் மூலம் வழங்கப்படும்? (1990)

21) போட்டிச் சந்தையொன்றிலே விற்கப்படும் ஒரு பொருள் பற்றிய சிலவிபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. நிரம்பல் கேள்வி வளையிகள் நேர்கோடுகளாகும் எனக்கருதுக.

| அலகொன்றிற்கான விலை (ரூபா) | மாதமொன்றுக்கு வழங்கப்படும் கணியம் | மாதமொன்றுக்கு கோரப்படும் கணியம் |
|---|---|---|
| 2.50 | 200 | 50 |
| 0.50 | 0 | 150 |

i) வரிப்படம் ஒன்றிலே சமநிலைச் சந்தை விலையையும் கணியத்தையும் காட்டுக.

ii) விலையானது 1) அலகொன்றிற்கு ரூபா 1.00 ஆகவும்
2) அலகொன்றிற்கு ரூபா 2.00 ஆகவும்
இருக்கும்பொழுது கோரப்படும் மிகையான கணியம் எவ்வளவாக இருக்கும்?

iii) இப்பண்டம் அலகொன்று ரூபா 1.00 படி கட்டின்றி இறக்குமதி செய்யப்படக் கூடுமாயின்

1) உள்நாட்டு வழங்கலும்
2) இறக்குமதி மட்டமும் எவ்வாறிருக்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv) மேலே (3) (1) இல் காட்டப்பட்டதிலும் பார்க்க உயர்ந்த ஒரு மட்டத்திற்கு இப்பண்டத்தின் உள் நாட்டு உற்பத்தியை உயர்த்துவதற்குக் கைக்கொள் ளப்படக் கூடிய நடவடிக்கைகள் யாவை?

(1990 விசேட பரீட்சை)

22) போட்டிச் சந்தையில் விற்பனை செய்யப்பட்ட பண்ட மொன்று சம்பந்தமான சில தகவல்கள் கீழே தரப்பட் டுள்ளன. கேள்வி வளைகோடும் வழங்கல் வளைகோடும் நேர்கோடுகள் எனக் கருதுக.

| அலகு ஒன்றின் விலை(ரூபா) | மாதமொன்றுக்கு வழங்கலின் அளவு | மாதமொன்றுக்கு கேள்வியின் அளவு |
|---|---|---|
| 1.00 | 00 | 160 |
| 4.00 | 100 | 40 |

i) சந்தைச் சமநிலை விலையையும் அளவையும் வரிப்படத்திற் காட்டுக.

ii) இப்பண்டத்தினது அலகு ஒன்றின் ஆகக்கூடிய விற்பனை விலை ரூபா 2.50 என அரசாங்கம் முடிவு செய்துள்ளது எனக் கருதுக. அரசாங்க நடவடிக் கையின் பொருளாதார விளைவுகளை உமது வரிப்படத் தைப் பயன்படுத்தி விளக்குக.

iii) இப்பண்டத்தின் உற்பத்தியாளர் சங்கமொன்றை அமைத்து அதன் அங்கத்தவர்கள் அலகொன்றினை விற்பனை செய்யக்கூடிய ஆகக் குறைந்த விலைரூபா 3.50 என முடிவு செய்துள்ளனர் எனக் கருதுக. உமது வரிப்படத்தினைப் பயன்படுத்தி இந்நடவடிக் கையின் விளைவுகளை விளக்குக. (1991)

23) கருதுகோள் முறையான தேயிலைச் சந்தையொன்றில் கேள்வி வளைகோடும் வழங்கல் வளைகோடும் நேர்கோடு களாக அமைந்துள்ளன எனக் கருதுக.

ஒரு கிலோ கிராம் தேயிலையின் விலை 10 ரூபாவாக இருக்கையில் மிகை வழங்கல் 90 கிலோகிராம் ஆகும். விலை 5 ரூபாவாக இருக்கையில் மிகை வழங்கல் −50 கிலோ கிராம் ஆகும். வரிப்படம் ஒன்றின் துணையுடன் சந்தையின சமநிலை விலையைக் காண்க. (1992)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24) i) கேள்வி விதி என்பதால் கருதப்படுவது யாது?

ii) பின்வரும் கூற்றுக்கள் இரண்டும் முரண்பட்டன என நீர் கருதுகிறீரா? விடைக்குக் காரணங்களை தருக.
ஒரு பண்டத்தின் விலை குறைந்தமையால் அப் பண்டத்துக்கான கேள்வித் தொகை அதிகரித்தது.
ஒரு பண்டத்துக்கான கேள்வி அதிகரித்தமையினால் அப்பண்டத்தின் விலை அதிகரித்தது.

iii) கேள்வி விதிக்கு மாறான விதத்தில் பண்டமொன்றுக் கான கேள்வி செயற்படும் இரு சந்தர்ப்பங்களை விளக்குக.

iv) ஓர் அலகின் விலை 6/- ஆக உள்ளபோது X பண்டத் துக்கான கேள்வி பூச்சியமாக இருந்தது என்றும் ஓர் அலகின் விலை ஒவ்வொரு ரூபாவால் குறைய அதற் கான கேள்வி 5 அலகுகள் வீதம் அதிகரிக்கும் என் றும் விலை 0 ஆக இருக்கும் போது கேள்வித் தொகை 30 அலகுகளாக இருக்கும் என்றும் கருதுக.
மேலே தரப்பட்ட தரவுகளை அடிப்படையாக கொண்டு கேள்வித் தொழிற்பாடு ஒன்றினை அமைக் குக. (1994)

25) 1) ஒரு பரீட்சையிலே குறிப்பிட்ட ஒரு வினாவுக்கு எழு தப்பட்ட விடை கீழே தரப்பட்டுள்ளது அதிலுள்ள பிழைகளை கண்டுபிடித்து அப்பிழைகளை திருத்தி விடையை மீண்டும் எழுதுக.
வருமானம் அதிகரிப்பதானால் கேள்வி அதிகரிக்கும் கேள்வி அதிகரிப்பதனால் விலை அதிகரிக்கும் விலை அதிகரிப்பது காரணமாக நிரம்பல் அதிகரிக்கும் அதனால் விலையானது ஆரம்பத்தில் இருந்த மட்டத்துக்கு கீழ்நோக்கித் தள்ளப்படுகின்றது.

2) குறிப்பிட்டவொரு பண்டத்தினது அல்லது சேவை யினது நிரம்பல் நிலையானது என்றும் நிலவுகின்ற விலை அப்பண்டத்துக்கான கேள்வி மிகையாக உள் ளது என்றும் கருதுக.

i) மேலே விலைப்படுத்த இந்த நிலைமையை ஒரு வரிப் படம் மூலம் காட்டுக

ii) இத்தகைய ஒரு நிலைமையை எடுத்துக் காட்டுவதற்கு மெய் உலகில் இருந்து ஒரு உதாரணம் தருக.

iii) நிலையான நிரம்பலை கொள்வோரிடையே ஒதுக்கீடு செய்வதற்குக் கையாளக்கூடிய மாற்று முறைகளைக் குறிப்பிட்டு கருத்துரைக்க (1994)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26) i) உற்பத்தியாளர் சேவகமொன்று அதன் அங்கத்தவர் களான உற்பத்தியாளர்கள் ஒரு பண்டத்தினை விற்க வேண்டிய குறைந்த பட்ச விலையை நிர்ணயிக்கும் எனக் கருதுக. இத்தகைய தலையீடு காரணமாக சந்தையில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் யாவை? வரிப்படத்தின் துணையுடன் விளக்குக.

ii) விவசாயப் பொருட்களினது விலைகளும் விவசாய உற்பத்தியாளரது வருமானங்களும் அடிக்கடி தளம்பு வதற்கான காரணங்களை கேள்வி நிரம்பல் பகுப் பாய்வினைப் பயன்படுத்தி விளக்குக? (1994)

27) பின்வரும் ஒவ்வொன்று பற்றியும் விளக்கக் குறிப்பு எழுதுக

i) சந்தைப் பொருளாதாரம் ஒன்று கட்புலனுக்கு எட் டாத ஒரு கருத்தினால் ஒழுங்குபடுத்தப்படுவது

ii) சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் நுகர்வோன் இறை மையுடையவனாவான்.

iii) சந்தை முறைமை புறக்காரணிகள் இருக்கும் நிலை யில் தோல்வியடைகின்றது.

iv) அண்மை ஆண்டுகளில் உலகப் பொருளாதாரத்தில் மாறு நிலையில் உள்ள பொருளாதாரங்கள் எனப் படும் புதிய பொருளாதார பகுதியொன்று தோன்றி யுள்ளது. (1995)

29) i) பின்வரும் கூற்றுக்களை சுருக்கமாக விளக்குக

1) ஒரு பண்டத்தின் கேள்வியின் விலை நெகிழ்ச்சி சம்பந்தப்பட்ட பண்டம் வரையறுக்கப்படும் விதத்தில் தங்கியிருக்கும்

2) ஒரு பண்டத்தின் கேள்வியின் விலை நெகிழ்ச்சி கருதப்படும் காலப்பொழுதில் தங்கியிருக்கும்

ii) குறித்த நுகர்வோர் தொகுதியொன்றின் பஸ் பயணத்திற்கான கேள்வி பற்றிய விபரம் தரப்படு கின்றது.

| | |
|---|---|
| கேள்வியின் வருமான நெகிழ்ச்சி | —0.4 |
| கேள்வியின் விலை நெகிழ்ச்சி | —1.2 |

புகையிரதப் பயணக் கூலிகள் தொடர்பில் கேள்வி குறுக்கு நெகிழ்ச்சி + 2.1 இப்புள்ளி விபரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொன்றினாலும் நீர் கருதுவது யாதென சுருக்க மாக விவரித்து இப்புள்ளி விபரங்களுக்கு அடிப்படையான காரணிகளை விளக்குக. (1995)

30) போட்டிச் சந்தை ஒன்றில் விற்கப்படும் ஒரு பண்டத்தைப் பற்றி பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன.

விலை (ரூபா) — மிகைக்கேள்வி (மில். அலகுகள்)

i) மேற்படி தரவினை ஒரு வரைபில் காட்டுக.

ii) சமநிலை விலையை உமது வரைபிற்காட்டி அதனை ஏன் ஒரு சமநிலை விலையெனக் கூறுவீர் என்பதனை விளக்குக.

iii) இப்பண்டத்துக்கான சந்தைக் கேள்வி எல்லா விலைகளிலும் 3 மில். அலகுகளினால் அதிகரிப்பதாகக் கருதுக. புதிய மிகைக் கேள்வியையும் புதிய சமநிலை விலையையும் உமது வரைபிற் காட்டுக.

iv) சந்தைக் கேள்வியில் ஒரு அதிகரிப்பை ஏற்படுத்தக் கூடிய மூன்று காரணிகளை குறிப்பிடுக.

(1996 AUG)

31) நிறுவனமொன்று தனது முழு நிரம்பலையும் சந்தையில் நிலவும் விலையில் விற்கக் கூடியதாக இருப்பதாகக் கருதுக. இந்த நிலைமையை ஒரு வரைபிற் காட்டி கேள்வி நெகிழ்ச்சி இனம் காண்க.

(1996 AUG)

# சந்தைச் சமநிலை

01) 1) பொருளியலில் ஒரு 'சந்தை' என்பதன் கருத்து யாது?

i) பொருளியல் ஆய்வில் கையாளப்படும் பிரதான சந்தை வகைகள் இரண்டு யாவை? (1993)

ii) சந்தை முறைமை என்ற பதத்தினது கருத்து யாது?

2) சந்தைச் சமநிலை என்ற எண்ணக் கருவிற்கு வரைவிலக்கணம் தருக

(1991) விசேட பரீட்சை)

3) சந்தைச் சமநிலை என்பது யாது? இது உண்மையான தொரு சந்தை நிலைமையா அல்லது இது சந்தையில் ஏற்படும் மாற்றத்தின் போக்கினை காட்டும் சுட்டியா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) தரப்பட்ட ஒரு நேரத்தில குறிப்பிட்ட பண்டம் ஒன்றிற்கான போட்டிச் சந்தை சமநிலையில் இருப்பதாகக் கொள்க.

i) ஒரு வரிப்படத்தில் இந்நிலைமையினைக் காட்டுக.

ii) சந்தைச் சமநிலையினது பண்புகளை பல்வேறு வழிகளில் விளக்கலாம். இவ்வாறான மூன்று விளக்கங்களைக் கூறுக.

iii) தரப்பட்ட எந்த ஒரு சந்தை விலையிலும் ஒரு பண்டத்தினது உண்மையான விற்பனவு அதனது உண்மையான கொள்வனவிற்குக் கட்டாயமாக சமமாகவிருக்கும் அப்படியாயின் சந்தை சமநிலை விலையின் விசேட பண்பு யாது?

iv) பின்வரும் நிகழ்வுகளை ஒரு வரிப்படத்தில் காட்டுக.

1) போட்டி சந்தை ஒன்றில காணப்படும் சந்தை விலையில் மிகை நிரம்பல் காணப்படுமாயின் சந்தை சக்திகள் விலையினை சமநிலை மட்டத்திற்குக் கீழ் நோக்கித் தள்ளும்.

2) சந்தை சமநிலையிலிருக்கும்போது நிரம்பல் அதிகரிக்குமாயின் சந்தைச் சக்தி ஒரு புதிய குறைந்த சமநிலை விலையினை ஏற்படுத்தும். (1993)

5) பின்வரும் சம்பவங்கள் பகிரங்கச் சந்தையில் அரிசியின் விலையை எவ்வழிகளில் பாதிக்கும் என்பதை ஆராய்க. ஒவ்வொரு சம்பவத்தினதும் விளைவுகளைக் காணும் போது ஏனையவை எல்லாம் மாறாமலிருக்கின்றன என்று கொள்க.

i) கோதுமை மாவின் விலை இரட்டித்தல்

ii) எண்ணெய் விலையில் 20 சதவீதத்தால் அதிகரிப்பு

iii) உணவுத் திணைக்களம் அரிசியின் கட்டுப்பாட்டு விலையைக் குறைத்தல்.

iv) வளமாக்கி மீதான அரசாங்க உதவிப்பணத்தில ஒரு அதிகரிப்பு (1981)

6) நிறைவான போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் ஒரு பண்டத்தின் சந்தைச் சமநிலையைப் பின்வருவன எவ்வாறு பாதிக்கும்? வரிப்படங்கள் மூலம் விளக்குக.

i) உள்ளீடு ஒன்றின் விலை ஏற்றம்

ii) உற்பத்தியாளருக்கு உதவிப் பணம் வழங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii) பொருளாதாரத்தில் சமபன மட்டம் உணர்தல.

iv) உள்நாட்டுச் சந்தையில் நிலவும் விலையிலும் பார்க்க குறைவான ஒரு விலையில் இப்பண்டத்தை இறக்குமதி செய்தல். (1981)

7) பின்வருவன ஒவ்வொன்றும் காரணமாகப் போட்டிச் சந்தையில் விற்கப்படும் ஒருபண்டத்தின் சந்தை சமநிலை எவ்வாறு மாற்றமுறலாம் என்பதை வரிப்படங்களைப் பயன்படுத்திக் காட்டுக.

i) புதிய தொழில்நுட்ப முறையை மேற்கொண்டதன் விளைவாக ஒரு பண்டத்தை உற்பத்தி செய்யும் சராசரிச் செலவில் ஒரு வீழ்ச்சியுண்டாதல்.

ii) ஒரு பண்டத்தின் மீது விற்பனை வரியொன்றை விதித்தல் (1981)

iii) அரசாங்கம் உற்பத்தியாளருக்கு உதவிப்பணம் வழங்குகின்றது.

iv) அடுத்தவரும் மாதத்தில் விலை அதிகரிப்பு ஏற்படும் என நுகர்வோர் எதிர்பார்க்கின்றனர். (1987)

8) பின்வரும் தோற்றப்பாடுகள் ஒவ்வொன்றும் இலங்கைத் தேயிலை உற்பத்தியாளர்களுக்கு கிடைக்கும் விலையில் எத்தகைய தாக்கத்தை உண்டுபண்ணக்கூடும் என்பதை பொருத்தமான வரிப்படங்களின் உதவியுடன் ஆராய்க.

i) உலகின் பிரதான கோப்பி உற்பத்தி செய்யும் நாடுகளின் அறுவடை தவறல்.

ii) தேயிலையிலிருந்து பொதுமக்கள் விரும்பும் குளிர்பானம் ஒன்றைத் தயாரிப்பதற்கான தொழில்நுட்பவியல் வழிமுறையொன்று கண்டுபிடிக்கப்படுதல்.

iii) சீனியின் உலக விலை மும்மடங்காகுதல்

iv) இந்தியாவிலிருந்து தேயிலை ஏற்றுமதி செய்தல்மீது இந்திய அரசாங்கத்தினால் தடையாணையொன்று பிறப்பிக்கப்படுதல். (1986)

9) உமது விடைகளின் தகைமையை நிறுவுவதற்கு வேண்டிய எடுகோள்களைக் குறிப்பிட்டுப் பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாகவும் தெளிவாகவும் விடை தருக

i) அரிசிக்கான கேள்வி நெகிழ்ச்சியற்றதாக இருப்பின் ஒரு உச்ச அறுவடை நெல் விவசாயிகளின் மொத்த வருமானத்தை அதிகரிக்குமா? குறைக்குமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii) நடுத்தர வகுப்பினரின் வருமானத்தில் பரவலான அதிகரிப்பு ஏற்படின் அது முட்டையின் விலையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்?

iv) சிங்கள இந்து வருடப்பிறப்பு பண்டிகை வாழைப் பழத்தின் விலையை எவ்வாறு பாதிக்கும்?

v) பகிரங்கச் சந்தையில் அரிசியின் விலையில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டால் அது போறணைச் சொந்தக் காரர்களின் வருவாயின் தாக்க விளைவுகளை ஏற் படுத்துமா? (1985)

10) உழவர்களுக்கு அறுவடை முன்னரிலும் அதிகரிக்கின்றது ஆயினும் அவர்களது வருமானம் வீழ்ச்சியடைகின்றது. எத்தகைய சூழ்நிலைகளில் இது நிகழக்கூடும் ஒரு விளக் கப்படத்தின் உதவியோடு விளக்குக. 1987

11) உம்முடைய பொருளியற் கோட்பாட்டு அறிவைப் பயன் படுத்திப் பின்வரும் ஒவ்வொன்றையும் விளக்குக.

i) இப்பருவத்தில் உழவர்கள் சிறந்த அறுவடையைப் பெற்றனர். எனினும் அவர்களுடைய விற்பனை வருமானம் வீழ்ச்சியைக் காட்டியது.

ii) இவ்வருடம் தொழிலாளர்கள் கூடிய கூலிகளைப் பெற் றனர். ஆனால் அவர்கள் கொள்வனவு செய்யக் கூடிய பொருள்களினதும் அளவில் வீழ்ச்சி காணப் பட்டது. (1987)

iii) விவசாயிகள் அதிக அளவான விளைச்சலை அறுவடை செய்த போதிலும் அவர்கள் விற்பனை மூலம் பெற்ற வருமானம் வீழ்ச்சியுற்றது.

iv) தொழிலாளர் பணமாகப் பெற்ற கூலிகள் அதிகரித்த போதிலும் பணவீக்கம் காரணமாக பண்டங்களைக் கொள்வனவு செய்யும் அவர்களது ஆற்றல் வீழ்ச்சி யுற்றது. (1991)

12) வரட்சியொன்றின் காரணமாக விவசாயிகளினால் சந்தை படுத்தபடும் வெங்காயத்தின் நிரம்பல் வீழ்ச்சியடை கின்றது. ஆனால் அவர்களது மொத்த விற்பனை வருவாய்கள் மிக உயர்வாக இருக்கின்றன. எத்தகைய சூழ்நிலையில் இது நிகழக்கூடும்?
உமது விடையினை விளக்குக (1993)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13) போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் பண்டமொன்றின் சந்தைச் சமநிலை எவ்வாறு பின்வரும் அபிவிருத்திகள் ஒவ்வொன்றின் விளைவாகவும் மாற்றமடையும்? வரிப்படங்களுடன் உமது விடைகளை விளக்குக.

i) அரசாங்கம் உற்பத்தியாளர்களுக்கு உதவிப் பணத்தொகையொன்றை வழங்குகின்றது.

ii) பதிலீட்டு பட்டமொன்றின் விலை குறைக்கப்படுகின்றது.

iii) அடுத்த மாதமளவில் இப்பண்டத்தின் விலை உயருமென நுகர்வோன் பொதுவாக எதிர்பார்க்கின்றனர்

iv) இப்பண்டத்தினது உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூலப்பொருளொன்றின் விலையில் எழுச்சி காணப்படுகின்றது.

v) இப்பண்டத்தின் நுகர்வு உடலுக்கு ஊறு விளைவிக்கும் எனும் செய்தி கிடைத்துள்ளது.

(1990 விசேட பரீட்சை)

14) குறிப்பிட்டதொரு மாதத்தினுள் ஒரு கிலோகிராம் அரிசியின் சமநிலைச் சந்தைவிலை 8 ரூபாவிலிருந்து 10 ரூபாவாக அதிகரித்தது என்றும் வேறு எந்தத் தகவலும் உமக்குத் தரப்படவில்லை என்றும் கருதிக் கொள்க. இத்தகையதொரு மாறுதலை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக இருந்திருக்கக் கூடிய காரணிகள் யாவை?

(1989)

15) i) தேயிலைக்கான போட்டிச் சந்தையொன்றில்

1) கோப்பியின் விலை அதிகரித்தலும்

2) சீனியின் விலை அதிகரித்தலும்

தேயிலையின் சமநிலை விலையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தும் என்று தெளிவுபடுத்துக

ii) தேயிலை உற்பத்திக்கென உதவிப்பணம் வழங்கும் திட்டமொன்று தேயிலைச் சந்தையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பரிசீலனை செய்க.

iii) "உடனலத்திற்கு தேயிலை உகந்தது" எனும் கருத்து எங்கும் பரவுவது தேயிலைச் சந்தையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தும்?

(1992)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16) பின்வரும் கூற்றினை நீர் ஏற்றுக் கொள்வீரா? உமதுவிடைக்குக் காரணம் காட்டுக

1) குறிப்பிட்ட ஒரு பண்டத்துக்கான கேள்வியும் வழங்கலும் விகிதசமமாக அதிகரித்தால் அப் பண்டத்தின் சந்தை விலை மாறாதிருக்கும் 1992)

17) குறித்தவொரு பண்டத்திற்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சிக் குணகம் -1.5 என்றும் தற்போதைய விலையில் அப்பண்டத்திற்கு 10 சதவீதம் உண்டு என்று கருதுக இந்த மிகைக் கேள்வியை நீக்கிச் சந்தையில் சமநிலையை ஏற்படுத்துவதற்காகச் சந்தைச் சக்திகள் எவ்வாறு தொழிற்படுகின்றன. (1992)

18) பின்வரும் ஒவ்வொரு அபிவிருத்திகளினதும் விளைவாக போட்டிச் சந்தைப் பொருளாதாரம் மூன்றில் இடம் பெறக்கூடிய மாற்றங்கள் யாவை?

i) நுகர்வோரது சுவைகளிலேற்பட்ட ஒரு மாற்றத்தின் விளைவாக X பண்டத்திற்கான நுகர்வோர் கேள்வி அதிகரித்தல்

ii) ஒரு தொழிலநுட்ப மாற்றம் Y பண்டத்தினது உற்பத்தி செலவினைக் குறைக்கின்றது. மேற்படி மாற்றங்களைப் படிமுறையாகக் காட்டவும் வரிப் படங்கள் தேவையற்றன. (1992)

19) i) நிறைபோட்டிச் சந்தை ஒன்றின் சிறப்பியல்புகள் யாவை?

ii) இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் நெற்பயிர் செய்யும் ஒரு மகாவலிப் பிரதேச விவசாயியை நிறை போட்டிச் சந்தையில் ஒரு வழங்குநர் என்று விபரிப்பது எவ்வளவு தூரம் சரியாகும் (1988)

20) வழங்குநர் ஒருவர் குறிப்பிட்ட ஒரு பொருள் தொடர்பாக தனது வழங்கல் முழுவதனையும் குறிப்பிட்ட ஒரு விலையில் விற்றார் எனக் கருதிக் கொள்க

i) இக்கேள்வி நிலைமையை விளக்கும் கோட்டினைக் காட்டுக

ii) இத்தகையதொரு வழங்குநரின் கேள்விக்கோட்டின் நெகிழ்ச்சி யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii) இத்தகையதொரு சந்தை நிலைமையின் சிறப்பியல்புகள் யாவை? (1990)

21) இரண்டு ஏக்கர் காணியில் நெற்பயிர் செய்கையை மேற்கொள்ளும் ஒரு விவசாயி எதிர்நோக்கும் சந்தைக் கேள்வியைக் காட்டும் வளையி எத்தன்மை வாய்ந்ததாக இருக்கும்?

வரிப்படம் ஒன்றைப் பயன்படுத்தி விளக்குக. இத்தகைய உற்பத்தியாளர் ஒருவரை விவரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருளியல் எண்ணக்கரு யாது?
(1990 விசேட பரீட்சை)

22) எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையின் முழு இறப்பர் நிரம்பலையும் உலகச் சந்தையில் நிலவும் விலையின் கீழ் ஏற்றுமதி செய்ய முடியும் என்று எண்ணிக் கொள்க. இலங்கையின் இறப்பருக்கான ஏற்றுமதிக் கேள்வி வளைகோட்டின் பாங்கு யாது? வரிப்படம் ஒன்றின் உதவியுடன் விளக்குக (1988)

23) பின்வரும் சந்தைகளுள் எந்தச் சந்தையிலே போட்டி கூடுதலாக உள்ளது என நீர் கருதுகின்றீர்?

i) வெற்றிலைச் சந்தை

ii) சிகரட் சந்தை (1991 விசேட பரீட்சை)

24) இப்பண்டம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதுடன் இறக்குமதியும் செய்யப்படுகிறது, எனக்கருதுக. இறக்குமதி செய்யப்பட்ட பண்டம் நுகர்வோருக்கு அலகு ஒன்று ரூபா 18.00 எனும் வீதத்தில் விற்பனை செய்யப்படுகிறது. இவ்விலையில் எவ்வளவு தொகைக்கான கேள்வி எழும்? இப்பண்டத்தின் எந்தெந்த அளவுகள் முறையே இறக்குமதி செய்யப்படும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டும் வழங்கப்படும்? (1995)

25) பொருளாதார எண்ணக்கருக்களைக் கையாண்டு பின்வரும் நிலைமைகள் ஏற்படக்கூடிய சூழ்நிலைகளை விளக்குக. ஒவ்வொரு நிலைமையையும் விளக்குவதற்கு வரிப்படங்களை வரைக.

i) நிரம்பலாளன் ஒருவன் ஒரு பண்டத்தின் விலையை குறைக்கிறான் இதனால் விற்பனை தொகை அதிகரித்தது ஆனால் விற்பனை வருவாய் வீழ்ச்சியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) ஒரு பண்டத்தின் சந்தை விலை 50% இனால் அதி கரித்த போதும் அப்பண்டத்தின் மீதான மொத்த நுகர்வோன் செலவீடு மாறாது இருந்தது.

iii) போட்டிச் சந்தை ஒன்றில் விற்கப்படும் ஒரு பண்டத் தின் மீது அரசாங்கம் அலகொன்றுக்கு 2/- வரி விதித் தது. எனினும் அப்பண்டத்தின் சந்தை விலை மாறாது இருந்தது.

iv) வீட்டுத்துறையினரது வருமான மட்டம் அதிகரித்த போது அது ஒரு பண்டத்தின் குறைந்த அளவைக் கொள்வனவு செய்தது.

(1996 AUG)

# நெகிழ்ச்சிக் கோட்பாடு

1) 10 சதவீத விலை குறைப்பானது X எனும் பண்டத் தின் பொருட்டு கேட்கப்படும் தொகையை 12% இனால் அதிகரிக்க Z எனும் பண்டத்தின் பொருட்டு கேட்கப்படும் தொகையை 9% இனால் அதிகரித்தது.

i) X, Z பண்டத்தின் கேள்வி நெகிழ்ச்சியைக் கணிக்க.

ii) எந்த பண்டம் சார்பளவில் நெகிழ்ச்சியில்லாக் கேள்வியுடையது ஏன்?

iii) விலைகுறைப்பின் விளைவாக இப்பண்டம் ஒவ் வொன்றின் மீதான மொத்த நுகர்வோன் செலவு எவ்வாறு மாற்றமடையும்?

iv) மரக்கறி வகைகளுக்கான கேள்வி விலை நெகிழ்ச்சி இல்லாததென எடுத்துக் கொள்க கோவாவிற்கான கேள்வியும் விலை நெகிழ்ச்சியில்லாதது என முடிவு செய்யலாமா? (1980)

2) பின்வரும் கூற்றுக்களை ஒப்புக் கொள்கிறீரா? விளக்குக,

i) ஏனையவை மாறாத போது ஒரு பண்டத்தின் விலை 2% இனால் இறங்கும் போது கேட்கப்படும் தொகை 3% இனால் ஏறுகின்றது இப்பண்டம் கேள்வி நெகிழ்ச்சியானது

ii) கேள்வியின் விலை நெகிழ்ச்சிக் குணகம் 0.1 ஆயிருக் கும் போது போது கேள்வி அலகு நெகிழ்ச்சியானது.

iii) ஒரு பண்டத்தின் விலை ஏறும்போது அப்பண்டத்தின் பொருட்டு நுகர்வுச் செலவும் ஏறுகின்றது இப்பண் டத்துக்கான கேள்வி விலை நெகிழ்ச்சியானது.

(1981)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) i) கேள்வியின் விலை நெகிழ்ச்சியினை வரையறை செய்து அது எங்ஙனம் அளவிடப்படும் என்பதனை காட்டுக

கேள்வியின் விலை நெகிழ்ச்சிக்கும் வருமான நெகிழ்ச்சிக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக

ii நெகிழ்ச்சி வாய்ந்த கேள்வி, நெகிழ்ச்சி அற்ற கேள்வி எனும் எண்ணக்கருக்களை விளக்குக

அந்த இரு கேள்வி நிலைமைகளையும் குறித்து நிற்கக் கூடிய இரு நெகிழ்ச்சிக் குணக பெறுமானங்களுக்கு உதாரணம் தருக.

iii) கேள்வியின் விலை நெகிழ்ச்சி எனும் எண்ணக்கருவை பயன்படுத்தி பண்டம் ஒன்றின் விலையிலான விற்பனை அப்பண்டத்தின் மீதான நுகர்வோன் செலவில் ஏற்படுத்தும் தாக்கத்தை விளக்குக

iv) கேள்வியின் விலை நெகிழ்ச்சியானது பண்ட வரி ஒன்றிலிருந்து அரசு பெற்றுக் கொள்ளக்கூடிய வரி வருமானத்தில் எங்ஙனம் செல்வாக்கு செலுத்தும் (1984)

4) பின்வரும் கூற்றுக்கள் சரியானவையா தவறானவையா என்பதைக் குறிப்பிட்டு அவசியமான இடங்களில் விளக்க வரைபடங்களை வரைக

i) மூலத்தினூடாக வரையப்பட்ட நேர்கோட்டு வளையி தன் முழுவீச்சிலும் சீரான நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும்

ii) கேள்வியானது வருமான நெகிழ்வற்றதாக அமையும் போது குறிப்பிட்ட பண்டத்துக்காக செலவிடப்படும் நுகர்வோன் வருமானத்தின் விகிதாசாரம் நுகர்வோன் வருமானம் அதிகரிக்கும்பட்சத்தில் அதிகரிக்கும்

iii) ஒரு பதிலீட்டுப் பொருளின் விலை தொடர்பாக ஒரு பண்டத்துக்கான கேள்வியின் குறுக்கு நெகிழ்ச்சி நேர் பெறுமானத்தைப் பெறும் (1985)

5) பண்டத்துக்கு பண்டம் கேள்வியின் கேள்வி நெகிழ்ச்சி ஏன் மாறுகின்றது (1986)

6) i) கேள்வியின் விலை நெகிழ்ச்சிக்கும் கேள்வியின் புள்ளி நெகிழ்ச்சிக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) கீழ்நோக்கிச் சாயும் நேர்கோட்டு கேள்வி வளையி ஒன்றில் கேள்வியின் புள்ளி நெகிழ்ச்சி பூச்சியத்தி லிருந்து முடிவிலி வரை மாறலாம் நிரவுக.

iii) அலகு முறையான நெகிழ்ச்சிக் கேள்வி வளையி ஒன்றை வரைக.

இது அலகு முறையான நெகிழ்ச்சியுடையது என்பதனை எவ்வாறு நிரவுவீர் (1987)

7) i) குறிப்பிட்டதொரு பண்டத்தின் விலை 1 ரூபாவிலிருந்து 1.50 ஆக உயர்ந்தபோது அப்பண்டத்துக்கான கேள்வியின் அளவு 6000 — 3000 அலகுகளாக குறைந்தது இப்பண்டத்துக்கான கேள்வி அலகுசார் நெகிழ்ச்சிக்குட்பட்டது என முடிவு செய்வீரா?

ii) இரண்டு பண்டங்களுக்கான சந்தைக் கேள்வியின் விலை நெகிழ்ச்சிகள் 0.87, 1.18 ஆகும் எனக் கொள்க விற்பனை வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் இவ்விரு பண்டங்களினதும் விலைகளை 10 % இனால் குறைப்பது என வழங்குநர்கள் தீர்மானிக்கின்றனர் வழங்குநர்கள் தமது நோக்கத்தை எய்துவார்கள் என நீர் கருதுகிறீரா?

iii) குறிப்பிட்டதொரு பண்டத்துக்கான கேள்வியின் வருமான நெகிழ்ச்சி நகரத்திலுள்ள மக்களின் ஒருபகுதியினரை பொறுத்து நேரானதாக இருக்க அதே நகரத்தின் மற்றுமொரு பகுதி மக்களைப் பொறுத்து அந்நெகிழ்ச்சி மறையானதாக இருந்தது எனக் கொள்க ஒரே நகரத்தில் ஒரே பொருளைப் பொறுத்தவரை இத்தகையதொரு வித்தியாசம் எவ்வாறு ஏற்பட முடியும்

iv) எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையின் முழு இறப்பர் நிரம்பலையும் உலக சந்தையில் நிலவும் விலையின்கீழ் ஏற்றுமதி செய்ய முடியும் என எண்ணிக் கொள்க, இலங்கையின் இறப்பருக்கான ஏற்றுமதிக் கேள்வி வளைகோட்டின் பங்கு யாது? விளக்குக. (1988)

8) i. ஒரு பண்டத்துக்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சி கீழ்நோக்கி சாய்வுடைய நேர்கோட்டு கேள்வி வளைகோட்டின் வழியே மாற்றமடைவது ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) எச்சூழ்நிலைகளின்கீழ் விலை நெகிழ்ச்சியானது கீழ் நோக்கி சாய்வுடைய கேள்வி வளைக்கோட்டின் வழியே மாறாதிருக்க முடியும்.

iii) ஒரு பண்டத்தின் சந்தை நிரம்பல் நிறை நெகிழ்ச்சியுடையதாக அமையக் கூடிய சூழ்நிலைகளை ஓர் உதாரணத்துடன் விளக்குக

iv குடும்ப வருமானம் 50% இனால் அதிகரிக்கும் போது அடிப்படை உணவுக்கான குடும்பச் செலவுகளும் 50% இனால் அதிகரிக்கிறது. பொருத்தமான எண்ணக் கருவை பயன்படுத்தி விளக்குக.

(1989)

9) கேள்வியின் வருமான நெகிழ்ச்சி தொடர்பான பின்வரும் நிலைமைகளை எவ்வாறு விளக்குவீர்.

i) எதிரானது ii) பூச்சியம்

iii) 0 ற்கும் 1 இற்கும் இடையில்

iv) அலகு முறையானது v) ஒன்றிற்கு கூடியது (1990)

10) நீர் கற்ற பொருளாதார எண்ணக்கரு ஒன்றினைப் பயன்படுத்தி பின்வரும் கூற்றுக்களை விளக்குக.

i) X பண்டத்தின் விலை 10% இனால் குறைந்தவுடன் X பண்டத்துக்கான கேள்வி 12% இனால் அதிகரித்தது.

ii) X பண்டத்தின் விலை 10% இனால் குறைந்தவுடன் Y பண்டத்திற்கான கேள்வியில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை

iii) Z பண்டத்தின் விலை 10% இனால் குறைந்தவுடன் Z பண்டத்துக்கான கேள்வியில் மாற்றம் ஏற்படவில்லை

iv) விவசாயிகள் அதிகளவான விளைச்சலை அறுவடை செய்த போதிலும் அவர்கள் விற்பனை மூலம் பெற்ற வருமானம் வீழ்ச்சியுற்றது

v) குறித்த பண்டத்தின் மீது அறவிட்ட வரியை அரசாங்கம் உயர்த்திய போதிலும் அரசாங்கம் கூடியளவு வரி வருமானத்தை பெற முடியவில்லை.

vi) கடந்த 3 மாதத்தில் X இற்கான சந்தை விலையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்ட போதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தையிலே X இற்கான வழங்கலிலே குறிப்பிடத் தக்க அதிகரிப்பு ஏதேனும் காணப்படவில்லை.
(ஒவ் 3 புள்ளி) (1991)

11) i) கேள்வியின் விலை நெகிழ்ச்சியையும் கேள்வியின் வருமான நெகிழ்ச்சியையும் வேறுபடுத்துக

ii) பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்படுகின்றன

| பண்டம் | விலைமாற்றவீதம் | கேள்வித் தொகை மாற்ற வீதம் |
|---|---|---|
| காய்கறி | 30 | 12 |
| சிகரட் | 10 | 20 |
| சேட்டுக்கள் | 10 | 10 |

1) ஒவ்வொரு பண்டத்துக்குமான கேள்வியின் விலை நெகிழ்ச்சிக் குணகத்தை கணிக்க

2) ஒவ்வொரு பண்டத்தினதும் விலை 10% இனால் அதிகரிக்கின்றது எனக் கருதுக இந்த அதிகரிப்பு இப்பண்டம் ஒவ்வொன்றினதும் மொத்த செலவினத்தை எவ்வாறு பாதிக்கும்

iii) கீழ் நோக்கிச் சாயும் நேர்கோட்டுக் கேள்வி வளை கோடு வழியே கேள்வியின் விலை நெகிழ்ச்சி சீராக வீழ்ச்சியடைய காரணம் என்ன? (1991)

12) i) குறித்தவொரு பண்டத்துக்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் காரணிகள் எவை?

ii) கேள்வியின் விலை நெகிழ்ச்சிக் குணகம் எப்போதும் சய பெறுமானத்தை எடுக்கக் காரணம் என்ன?

iii) கேள்வியின் விலை நெகிழ்ச்சிக்கு வரைவிலக்கணம் தந்து அதை எவ்வாறு கணிப்பது என்று கூறுக

iv) குறித்தவொரு பண்டத்துக்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சிக் குணகம் —1.5 என்றும் தற்போதைய விலையில் அப்பண்டத்துக்கு 10% மிகைக் கேள்வி உண்டு என்றும் கருதுக

இந்த மிகைக் கேள்வியை சந்தையில் சமநிலையை ஏற்படுத்த சந்தை சக்திகள் எவ்வாறு தொழிற்படுகின்றன

(1992)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13) i) X, Y என்ற இரு பண்டங்களை பற்றிய பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன

| | X | Y |
|---|---|---|
| கேள்வியின் விலை நெகிழ்ச்சி | —0.3 | —1.6 |
| கேள்வியின் வருமான நெகிழ்ச்சி | —0.1 | 2.5 |

X இற்கும் Y க்கும் இடையிலான குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி 0

மேற்படி தகவலின் அடிப்படையில் இப்பண்டங்கள் ஒவ்வொன்றினதும் கேள்வியின் இயல்பு பற்றி நீர் என்ன கூறுவீர்

ii) வரட்சியின் காரணமாக விவசாயிகளால் சந்தைப் படுத்தப்படுத்தப்படும் வெங்காயத்தின் நிரம்பல் வீழ்ச்சி யடைகின்றது ஆனால் அவர்களது மொத்த விற்பனை வருவாய் மிக உயர்வாக இருக்கின்றது ஏன?

(1993)

14) i) கேள்வியின் புள்ளி நெகிழ்ச்சிக்கும் வளைவு நெகிழ்ச்சிக் கும் இடையிலான வேறுபாட்டினை எடுத்துக்காட்டுக இந்நெகிழ்ச்சிகள் எவ்வாறு அளவிடப்படுகின்றது

ii) குறித்த பண்டம் ஒன்றின் விலை 2 ரூபாவிலிருந்து 3 ரூபாவாக அதிகரிக்கும்போது பண்டத்துக்கான கேள்வி 10000 அலகுகளிலிருந்து 5000 அலகுகளாக குறைகின்றது இப்பண்டத்துக்கான கேள்வி அலகு நெகிழ்ச்சி கொண்டது எனும் முடிவுக்கு வருவீரா?

iii) பண்டமொன்றின் விலையில் மாற்றம் ஏற்படும் போது பண்டத்தின் மீதான நுகர்வுச் செலவு மாற்றமடை யாது இருக்கும் இதனை ஒரு வரிப்படத்திற் காட்டுக. எந்த நெகிழ்ச்சி நிலைமையின் கீழ் இது இடம்பெற லாம். (1995)

15 i) கேள்வியின்புள்ளி நெகிழ்ச்சி என்பதன் கருத்து யாது?

ii) பண்டம் ஒன்றின் கேள்வி பற்றிய பின்வரும் தகவல்கள் உமக்கு தரப்படுகின்றன

| விலை | கேட்கப்படும் தொகை |
|---|---|
| 10 | 40 |
| 06 | 60 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 ரூபாவிலிருந்து 6 ரூபாவிற்கும்

6 ரூபாவிலிருந்து 10 ரூபாவிற்கும் ஆன ஒரு விலை மாற்றத்தின் கேள்வி நெகிழ்ச்சியைக் கணிப்பதற்கு புள்ளி நெகிழ்ச்சி முறையினைக் கையாளுவீரா? இல்லையெனில் ஏன்? வேறு எந்த முறையினை கையாளுவீர்?

iii) நிறுவனமொன்று தனது முழு நிரம்பலையும் சந்தையில் நிலவும் விலையில் விறகக் கூடியதாக இருப்பதாகக் கருதுக. இந்த நிலமையை ஒரு வரைபாகக் காட்டி கேள்வி நெகிழ்ச்சியை இனம் காண்க.

(1996)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சாந்தி அச்சகம் - யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org